29ம் ஆண்டில்...
*29 years of publishing*

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

தித்திக்கும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Cnaada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada

Issue: 1558

February 13, 2026



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் ஒற்றுமையுடன் தொடர்ந்து போராடுவோம் என்கிறார் சங்க செயலாளர் சிவாநந்தன் ஜெனிற்றா

(10-02-2026)

உரிமைகளுக்காக போராடியவர்களுக்கு பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டது. உண்மையிலேயே அவர்கள் பயங்கரவாதிகள் இல்லை. அவர்கள் உணர்வுடன் தமது உரிமைகளை பெற்றுக் கொள்ள போராடியவர்கள். எனவே வடக்கு கிழக்கில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் ஒற்றுமையுடன் எமது உறவுகளுக்காக தொடர்ந்து குரல் கொடுப்போம் என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க செயலாளர் சிவாநந்தன் ஜெனிற்றா தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க புதிய நிர்வாக தெரிவு 10ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது புதிய நிர்வாகத்தில் தலைவராக மீண்டும் உதயச்சந்திரா தெரிவு செய்யப்பட்டார்.செயலாளராக லுஸ்ரின் மோகன்ராஜ், உப தலைவராக திருமதி. ரஞ்சினி, உப செயலாளராக வேணி, பொருளாளராக இமாக்குலேற் ஆகியோர் தெரிவு செய்யப்பட்ட தோடு, நிர்வாக உறுப்பினர்கள் 8 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் யுத்தம் முடிவடைந்த பின்னர் 2009 ஆம் ஆண்டு எமது உறவுகளை கையில் ஒப்படைக்கப்பட்டும், சரணடைந்தும், இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் வைத்தும் கடத்திச் செல்லப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்று இந்த இலங்கை நாட்டில், அரசுகள் ஆட்சிக்கு வந்து கொண்டு இருக்கின்ற போதும், இந்த ஒரு தீர்வும் கிடைக்காமல், நாங்கள் இன்று 16 வருடங்களை கடந்து தொடர்ந்தும் எம் உறவுகளுக்காக போராெ வருகின்றோம்.

எமது உறவுகள் எங்கே என்று கேட்டு தொடர்ச்சியாக போராடி வருகிறோம். ஆனால் அந்த உறவுகளுக்கு என்ன நடந்தது என்று பதில் கூற முடியாத அரசு அவர்களை நம்பி சரணடைந்த அல்லது கையில் ஒப்படைத்த எமது உறவுகளை என்ன செய்தார்கள் என்று கேள்விக்குறியாக உள்ளது.



மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசுகள் பொய் பிரச்சாரங்களை கூறி எமது மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றது. தற்போது போராட்டக்குழுவில் இருந்து வந்துள்ள அனுர அரசும் இன்று போலி நாடகம் ஆடி வருகிறது. அனுர அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் வலி தெரியும் என்று கூறி இருந்தனர்.

ஆனால் அனுர ஆட்சிக்கு வந்து ஒரு வருடங்கள் கடந்துள்ள போதும் எந்த ஒரு தீர்வும் எட்டப்படாத நிலையில் இராணுவத்தைக் காட்டிக் கொடுக்காமல் உள்ளார்.

எமது உறவுகளை அழித்ததே இந்த இராணுவம் தான்.ஒரு நாட்டில் இரண்டு இனம் வாழ்கின்ற போது ஓர் இனத்தை அழித்து ஓர் இனம் தெற்கிலே வெற்றி விழா கொண்டாடியுள்ளது.

நாங்கள் இந்த நாட்டிலே மனிதர்களாக வாழ்வதற்கு உரிமை இல்லையா? நாமும் ஒரு தேசிய இனம். 30 வருடங்களாக எமது இளைஞர், யுவதிகள் ஆயுதம் ஏந்தி போராடும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

எமது உரிமைகள் அப்போது மறுக்கப்பட்டிருந்தது.எமது உரிமைகளுக்காக அவர்கள் போராடியவர்கள்.

உரிமைகளுக்காக போராடியவர்களுக்கு பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டது. உண்மையிலேயே அவர்கள் பயங்கரவாதிகள் இல்லை. அவர்கள் சம்பளத்துக்கு வேலைக்குச் செல்லவில்லை. அவர்கள் உணர்வுடன் தமது உரிமைகளை பெற்றுக் கொள்ள போராடியவர்கள்.

எனவே வடக்கு கிழக்கில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் ஒற்றுமையுடன் எமது உறவுகளுக்காக தொடர்ந்து போராடுவோம். என அவர் மேலும் தெரிவித்தார்.



# வடக்கு மற்றும் கிழக்கின் துரித அபிவிருத்திகென தனியான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பெற்றுள்ளது என்கிறார் வடக்கின் ஆளுனர்!

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயகவின் விசேட பணிப்புரைக்கு அமைவாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் துரித அபிவிருத்திக்கெனத் தனியான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவுள்ளது. இதனைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், மாகாணத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான (Mega Projects) முன்மொழிவுகளை உடனடியாகத் தயாரிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில், மாகாண உயர் அதிகாரிகளுடன் 9ம் திகதி திங்கட்கிழமை (09.02.2026) மாலை நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலேயே ஆளுநர் இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் மாகாண பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் மாகாணப் பணிப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர் மேலும் கூறியதாவது, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் தனிக்கவனம் செலுத்தியுள்ளார். இதன் அடிப்படையில் இரு மாகாணங்களிலும் விசேட அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக நிதியை ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த அரிய வாய்ப்பை எமது மாகாணத்தின் வளர்ச்சிக்காக நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாண சபையால் ஏற்கனவே 32 மிகப் பெரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுத் தயார் நிலையில் உள்ளன. இத்திட்டங்களைத் தற்போதைய சூழல் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப மீள் பரிசீலனை செய்து, உடனடியாகச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதிய திட்டங்களை வடிவமைக்கும் போதும், இருக்கும் திட்டங்களை மீளாய்வு செய்யும் போதும் சில விடயங்களில் அதிக கவனம் செலுத்துமாறு ஆளுநர் அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டினார்:

திட்டங்கள் மாகாணத்தின் பொருளாதாரத்தை உயர்த்தக் கூடியதாக இருக்க வேண்டும். எமது மாகாண இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களாக அவை அமைய வேண்டும். மாகாணத்தில் இதுவரை பயன்படுத்தப்படாமல் இருக்கும் இயற்கை மற்றும் ஏனைய வளங்களைப் பயனுள்ள வகையில் கையாளக் கூடியதாக இருக்க வேண்டும். மாவட்ட ரீதியாக மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

“வெறுமனே கட்டடங்களைக் கட்டுவதை விட, மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நீண்டகாலத் திட்டங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்” எனவும் ஆளுநர் இதன்போது வலியுறுத்தினார்.

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தனது தந்தையின் மரணத்திற்கு வைத்தியர்களின் தவறே என மகன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையீடு

காதுக்குத்து என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் உயிரிழந்த நிலையில், வைத்தியர்களின் தவறால் உயிரிழப்பு சம்பவித்ததாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சூராவத்தை சுன்னாகத் தைச் சேர்ந்த வீரசிங்கம் அம்பிகைபாகன் (வயது-68) என்பவர் கடந்த 23ஆம் திகதி காதுக் குத்து காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் கண், காது, தொண்டை (E.N.T) சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் 41ஆம் விடுதிக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு 6ம் திகதி வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

தந்தையின் மரணம் வைத்தியர்களின் தவறே எனத் தெரிவித்து மகன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் விசாரணை களை மேற்கொண்டார்.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
i HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail: raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1558 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 13, 2026

# தமிழ்க் கனடியர்களின் எழுச்சியாக விளங்கும் உணர்வை ஊட்டிய "சங்கநாதம்" என்னும் கம்பீரமான நிகழ்வில் தமிழர் சமூக மையத்திற்கு தேவையான நிதி சேகரிப்பின் எல்லையைத் தாண்டிய மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்ட அற்புதமான தருணம்!






கடந்த 6ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஸ்காபுறோ நகரின் மத்தியில் கம்பீரமான எழுந்து நிற்கும் **SCABOROUGH CONVENTION CENTRE** மண்டபத்தைச் சுற்றியுள்ள வாகனத் தரிப்பிடம் அதன் அளவைத் தாண்டி "பிதுங்கி வழிந்தது. பனிக் குவியல்களோடு போட்டி போட்டி போட்டுக் கொண்டு வாகனங்களும் "குவிந்து" கிடந்தன. ஆமாம்! "சங்கநாதம்" என்னும் தமிழ்க் கனடியர்களின் எழுச்சியாக விளங்கும் உணர்வை ஊட்டிய ஒரு கம்பீரமான நிகழ்வில் தமிழர் சமூக மையத்திற்கு தேவையான நிதி சேகரிப்பின் எல்லையைத் தாண்டிய மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்ட அற்புதமான தருணம் அங்கு அரங்கேறியது.

தமிழ்க் கனடியர்களின் அரசியல் வெற்றிக்கு உதாரணமாக விளங்கும் அரசியல் தலைவர்கள் அமைச்சர்களாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் மாகாண அரசின் அமைச்சர்களாகவும் அதன் உறுப்பினர்களாகவும் நகர சபை அங்கத்தவர்களாகவும் அங்கே கம்பீரமாகக் காட்சி தர...

மற்றொரு பக்கத்தில் வெற்றிகளை ஈட்டிய வர்த்தகச் சமூகத்தின் சாதனையாளர் நிதியினை அள்ளிவழங்கிய பெருமையோடு புன்னகை தவழ அங்கு "தமிழர் கூட்டம்" திரண்டிருந்தது. (தொடர்ச்சி 3ம் பக்கம்)

## REMAX Community Realty Inc. hosted it's Annual Winter Gala and honored many Successful Agents.




## நன்கு அறியப்பெற்ற வீடு விற்பனை முகவர் ரஜீவ் கோணேஸ் நிர்வாகத்தில் இயங்கும் REMAX Community Realty Inc நடத்திய குளிர்கால விருது வழங்கும் விழா!



கனடாவில் நன்கு அறியப்பெற்ற வீடு விற்பனை முகவர் நிறுவனத்தை தலைமை தாங்கி நடத்தி வரும் முகவர் ரஜீவ் கோணேஸ் அவர்களின் நிர்வாகத்தில் இயங்கும் **REMAX COMMUNITY REALTY INC** தனது வருடாந்த குளிர்கால விருது வழங்கும் விழாவை கடந்த 07-02-2026 சனிக்கிழமையன்று ஸ்காபுறோ கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி விருதுகள் வழங்கும் விழாவை சிறப்பாக நடத்த ரஜீவ் கோணேஸ் அவர்களின் குடும்பத்தினர்- அவரது சகோதர சகோதரி மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். (தொடர்ச்சி 15ம் பக்கம்)

தமிழில் உரையாடி உங்கள் நெருக்கடியான நேரத்தில் எமது சேவைகளை பூரண திருப்தியுடன் பெற்றுக்கொள்ளுங்கள்
SMART RESTORATION
ARUN ANANTH
24/7 Emergency Services
info.smartrestoration@gmail.com
smart-restoration.net
647-849-4444 (Cell)
1-833-SMART 09 (Office) (76278)
Water and flood services • Mold remediation • Trauma • Sewage cleanup • Fire & smoke • 24/7/365 days
LICENSED INSURED CERTIFIED

GL PRIME LEGAL SERVICES
இலவச சட்ட ஆலோசனை 905 334 6851
Immigration Law | Family Law | Criminal Law
• PR APPLY • SPONSORSHIPS • WORK PERMIT
• SUPER VISA All Other Legal Services
www.glprimelegal.ca ERAA PLAZA Unit #231

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழர் பிரதேசத்தில் இனவிருத்தி குறைந்து செல்வதால் பல பாடசாலைகள் மூடப்படும் அபாயம்!




தமிழர் பிரதேசத்தில் இனவிருத்தி குறைந்து செல்வதால் பல வரலாற்றுப்புகழ் மிக்க பாடசாலைகள் மூடப்படும் அபாயம் என உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற உடுவில் மான்ஸ் மகா வித்தியாலத்தின் இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு போட்டியில் விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தபோது இவ்வாறு அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய தலைமுறையினர் ஆரோக்கியம் குறைந்தவர்களாக உருவெடுக்கின்றனர். அதனால் நம்பிக்கை இல்லா வாழ்க்கையை முன்னெடுப்பதுடன் தனது பரம்பரையை வலுவாக்க தவறுகின்றனர்.

போட்டிமிக்க சவால்மிக்க வாழ்கையை எளிதாக வெற்றி கொள்ள கற்றுத்தருவது விளையாட்டுப்போட்டி. அதனை பங்குபற்றுதல் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். இருந்தபோதும் பல பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது.

முதலாம் ஆண்டில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியாகவே காணப்படுகின்றது. இருந்தபோதும் சில பாடசாலைகளில் அனுமதிபெறுவதற்கு தவம் கிடக்கும் பெற்றோர், அதற்காக எவ்வளவு விலைகொடுக்கவும் தயாராக உள்ளனர். இது மாறவேண்டும். ஏனெனில் எமது வரலாற்று பாடசாலைகள் மாணவர்களின்க எண்ணிக்கையில் வீழ்ச்சிகண்டு மூடப்படும் அபாயகட்டத்தில் உள்ளன.

முன்னைய காலங்களில் கிராமப்புறங்களில் பிறப்புவீதம் குறைவதில்லை அதிகமாகவே காணப்படும். ஆனால் இன்று மாறாக பிறப்புவீதம் குறைந்து இறப்புவீதம் அதிகரித்துள்ளது.

நகரத்தை நோக்கிநகர்வதனால் கிராமப்புற பாடசாலைகள் கையறுநிலையில் இருப்பதுடன், அத்துடன் எம்மூதாதையர்களின் நோக்கமும் சிதைகிறது. இதனைக் கருத்தில் கொண்டு அருகில் இருக்கும் பாடசாலைகளை பாதுகாக்க வேண்டியது பெற்றோர்கள் பழைய மாணவர்கள் சமூகத்தினரது தார்மீக கடமையாகும் எனத் தெரிவித்தார்.



# அரசியலில் படுதோல்வியடைந்த சஜித் பிரேமதாச தனது அரசியல் இருப்புக்காக சட்டவிரோத கடற் தொழிலை ஆதரிக்கிறார் என அன்னராசா குற்றச்சாட்டு!

அனுர அரசாங்கத்தினால் சட்டவிரோத கரைவலை நிறுத்தப்பட்டமைக்கு எதிராக போராடுபவர்களுடன் தனது அரசியல் பயணத்தில் தொடர்ச்சியாக தோல்விகளைச் சந்தித்த சஜித் பிரேமதாச இணைந்து குரல் கொடுப்பது அவரது அரசியல் இருப்பை தக்கவைக்க எடுக்கும் முயற்சியாகும் என வடமாகாண கடற் தொழிலாளர் இணையத்தின் உறுப்பினர் அன்னலிங்கம் அன்னராசா குற்றச்சாட்டை முன்வைத்தார்.

குறித்த விடயம் தொடர்பாக 10ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் அவரை தொடர்புகொண்டு வினவும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய அரசாங்கம் சட்டவிரோத கரைவலையை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமையை வரவேற்பதோடு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவின் செயற்பாட்டுக்கு எனது கண்டனத்தையும் தெரிவிக்கிறேன்.

கடந்த வாரம் சட்டவிரோத கரைவலையை நிறுத்தியமைக்கு எதிராக ஜனாதிபதி செயலகம் முன் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற சஜித் பிரேமதாச முறையற்ற சட்டவிரோதமான தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு ஆதரவாக போராட்டத்தில் கலந்து கொண்டமையை வடபகுதியை மீனவர்கள் சார்பில் கண்டிக்கின்றோம்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் வடபகுதி கடலில் இடம்பெறும் சட்ட விரோத மீன்பிடி முறைகளை நடத்த வேண்டும் என வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர்.

2023 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வருகை தந்த சஜித் பிரேமதாசாவிடம் பாரம்பரிய மீனவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் இடம்பெறும் சட்ட விரோத மீன்பிடி முறைகளை தடை செய்ய வேண்டும் அதனை பாராளுமன்றத்தில் நீங்கள் பேச வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தோம்.

ஆனால் சஜித் பிரேமதாச கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்துக்கு முன் இடம் பெற்ற சட்டவிரோத மீன்பிடியை தடை செய்தமைக்கு ஆதரவாக கலந்து கொண்டமை அவரின் பங்கு ரோத்து அரசியலை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையில் மாறி மாறி வந்த அரசாங்கங்களிடம் வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாக சட்டவிரோத மீன்பிடி முறைகளை நிறுத்துமாறு பல்வேறு சந்தர்பங்களில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட நிலையில் தற்போது ஒரு முறையை மட்டும் தடை செய்திருக்கிறார்கள்.

ஆனால் இது போதாது கடலில் சட்டவிரோத அனைத்து மீன்பிடி முறைகளும் நிறுத்தப்பட வேண்டும் என்பதே எமது மீனவர்களை எதிர்பார்ப்பும் கோரிக்கையாகவும் உள்ளது.

ஆகவே தனது அரசியல் இருப்புக்காக தனது அரசியல் பயணத்தில் தோல்விகளையெ தொடர்ச்சியாகச் சந்தித்து வரும் சஜித் பிரேமதாச சட்ட விரோத மீன்பிடி முறைகளை ஊக்குவிக்கும் போராட்டங்களில் கலந்து கொள்வதை நிறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இரண்டரை கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்படவுள்ள இன்பச்சோலை வீதி!



இரண்டரை கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில், யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை, இன்பச்சோலை வீதியை புனரமைப்பதற்கான பூர்வாங்க பணிகள் 11-02-2026 புதன்கிழமை அன்றையதினம் ஆரம்பமாகியுள்ளன.

குறித்த வீதியானது 45 வருடங்களுக்கு மேலாக புனரமைப்பு செய்யப்படாமல் இருந்த நிலையிலேயே இன்று இவ்வாறு புனரமைப்பு பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.



இந்த நிகழ்வில் கலந்துகொண்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ பவானந்தராஜா முதலில் அடிக்கல்லை நாட்டி வைத்தார். அதனைத் தொடர்ந்து ஏனையோர் அடிக்கற்களை நாட்டி வைத்த நிலையில் புனரமைப்பு பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ பவானந்தராஜா, சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமார், குறித்த பகுதிக்கான கிராம சேவகர் சிவகுமார், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் கிராம மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்கிறார் பவானந்தராஜா எம்.பி!

யாழ்ப்பாணம் - அல்லைப்பிட்டி துப்பாக்கி சூட்டு சம்பவத்திற்கு சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவற்றை நாங்கள் எடுப்போம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

11ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் வட்டுக்கோட்டை - இன்பச்சோலை வீதி புனரமைப்பில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரியவருகையில், சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என ஜனாதிபதியும் சொல்லியிருந்தார். சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ நாங்கள் அதை எடுப்போம். யாரில் பிழை இருக்கிறதோ அவர்களுக்கான தண்டனையை நாங்கள் கொடுப்போம். இந்த விடயத்தில் சட்டம் தனது வேலையை சரியாக செய்யும்.

பொலிஸாரோ, பாராளுமன்ற உறுப்பினர்களோ அல்லது பிரதேச சபை உறுப்பினர்களோ யார் பிழை செய்தாலும், யார் பிழை செய்தது என்பதை தீர்மானிக்க வேண்டியது நீதிமன்றம். எனவே நீதிமன்றம் சரியான நடவடிக்கை எடுக்கும் என்றார்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர், "சங்கானை பிரதேச செயலர் பிரிவில் திடீர் பணக்காரர்கள் உருவாகியுள்ளதாகவும், அவர்கள் குறித்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் வலி மேற்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கூறினீர்கள். அது தொடர்பான முன்னேற்றம் என்ன?" என் கேள்வி எழுப்பினார்.



அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதில் தெரிவிக்கையில், நாங்கள் இது தொடர்பான சில விபரங்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு இரவிலோ அல்லது ஒரு கிழமையிலோ நடவடிக்கையை எடுக்க முடியாது. ஆறுதலாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# வடக்கின் சுற்றுலாத்துறையில் ஒரு புதிய சகாப்தம் விரைவில் உருவாகும்!

வடமாகாணத்தின் சுற்றுலாத்துறையை உலகத்தரம் வாய்ந்ததாக மாற்றும் நோக்கில், வடமாகாண சுற்றுலாப் பணியகம் (Northern Province Tourism Bureau) மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடம் ஆகியவற்றுக்கு இடையில் ஒரு விசேட கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள், கூட்டு முயற்சி (Joint Venture): வடக்கின் 400-க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தளங்களை மேம்படுத்த பல்கலைக்கழகத்தின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்துதல்.

கல்விசார் மேம்பாடு (Academic Development): சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவப் பாடத்திட்டத்தை (Tourism & Hospitality Management) சர்வதேச தரத்திற்கு ஏற்ப நவீனப்படுத்துதல்.

ஆராய்ச்சி மற்றும் தரவு: வடக்கின் சுற்றுலா வளர்ச்சி குறித்த தரவு சார்ந்த ஆய்வுகளை (Research Units) இணைந்து முன்னெடுத்தல்.

மாணவர்களுக்கான வாய்ப்பு: சுற்றுலாத்துறையில் மாணவர்களுக்கு நேரடி களப்பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புகளை உறுதி செய்தல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.



Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# "ஒற்றுமையே பலம்" என்ற ஒரு கொடியின் கீழ் திரண்டு "தமிழ்ச் சமூக மையம்" கம்பீரமாய் எழுந்து நிற்கும் வகையில் எல்லையைத் தாண்டி நிதியைத் திரட்டிய பெருமையோடு தமிழ்க் கனடியர்கள்!

கனடா என்னும் பனி பெய்யும் குளிர் (திரு)நாட்டில் எம் தமிழ் மக்களின் இருப்பு ஆரம்பமாகி ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன என்று கணக்கிட்டுச் சொல்லும் வகையில் 1975ம் ஆண்டுக்கு முன்னர் இங்கு கால்பதித்தவர்களும் உள்ளார்கள். இவ்வாறாக அன்று ஆரம்பித்த ஈழத் தமிழர்களாகிய எமது கனடியக் கால்பதிப்பு 1980க்குப் பின்னர் மிகவும் வேகமாக இடம்பெற்றது எனலாம். எமது மண்ணில் எமது இளைஞர்களிடையே தோன்றிய விடுதலை உணர்வு சார்ந்த போராட்டம் கூர்மையடைந்து அங்கு எம் இனத்தின் மீது ஏவிவிடப்பெற்ற அடக்கு முறைகள் மற்றும் கைதுகள் போன்றவை எமது மக்கள் அந்த மாங்கனித் தீவை விட்டு வெளிநாடுகளுக்குச் செல்லும் நிர்ப்பந்தத்தை உண்டாக்கியது.

இவ்வாறாக போதிய கல்வித் தகைமைகள் உள்ளவர்களும் அவ்வாறு கற்கை நெறிகளை தொடர முடியாதவர்களும் இங்கு வந்து அரசாங்கத்தின் சட்டங்களுக்கு ஏற்ப தங்கள் நிரந்தர வதிவிடமாக இந்த மண்ணில் சங்கமமாகிவிடத் தொடங்கினார்கள். இன்னொரு பக்கத்தில் கல்வியறிவு அற்றவர்களைக் கூட தங்கள் சொந்த நாட்டில் நிம்மதியாக வாழ பாதுகாப்பு இல்லை என்ற காரணங்களுக்காக அகதிகளாக ஏற்று அவர்களுக்கு ஒளி மயமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுத்தது இந்த "மேப்பிள் இலை"யை அடையாளமாகக் கொண்ட மேன்மை மிகு தேசம் கனடா.! புடிப்படையாக தமிழ்க் கனடியர்களின் எண்ணிக்கை இந்த மண்ணில் அதிகரிக்க அதிகரிக்க. இங்கு எமக்காக ஆலயங்கள். விளையாட்டுக் கழகங்கள், கற்ற பாடசாலைகளின் பழைய மாணவ மாணவிகள் சங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள். தொழில் நிறுவனங்கள் என பல தோன்றின. பொது நிறுவனங்களாகவும் அமைப்புக்களாகவும் விளங்கிய அவற்றின் மூலம் எமது தமிழ்ச் சமூகம் ஒற்றுமையாக பல பொதுப் பணிகளை ஆற்றத் தொடங்கியது.

நாட்கள் நகர்ந்து செல்லச் செல்ல எமது சமூகம் சார்ந்த குடும்பங்கள் விரிவடைந்து எமது எண்ணிக்கை மிகக் குறுகிய காலத்தில் பலமிக்க ஒரு சமூகமாக அடையாளம் காணப்பெற்றது. எமக்காக ஆரம்பிக்கப்பெற்ற பத்திரிகைகள், வானொலி நிலையங்கள் மற்றும் தொலைகாட்சி நிறுவனங்கள் ஆகியன எமது இனத்தின் "அடையாளங்கள்" என பல்லின கலாச்சார நாடாக விளங்கும் கனடாவில் அரசியல் தலைவர்களால் சுட்டிக்காட்டப்படும் அளவிற்கு மரியாதைக்குரியவையாக விளங்கத் தொடங்கின.

இந்த கால கட்டத்தில் தான் எமது தமிழ்க் கனடியர்கள் நான்கு பக்கங்களிலும் வாழும் ஏனைய இனங்கள் சார்ந்த மக்களையும் அவர்களது வளர்ச்சிகளை கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்கள். எமது தமிழச் சமூகம் இங்கு வருவதற்கு முன்னரேயே இந்த மண்ணில் பல காரணங்களுக்காக தங்கள் நாட்டை விட்டு கனடாவில் கால் பதித்த சீனர்கள், பஞ்சாபியர்கள், ஆர்மேனியர்கள், யூதர்கள், இஸ்லாமியர்கள் என பல்லின மக்கள் எவ்வாறு தங்கள் நகர்த்திச் செல்கின்றார்கள் என்று அவதானித்தார்கள். எனவே தமிழர்களான தங்களுக்கென "சமூக மையங்களை" நிறுவி அவை மூலமாக தங்கள் இருப்பையும் இறுக்கத்தையும் மேலும் வலுப்படுத்தி தங்கள் அடையாளத்தை மேலும் பிரகாசமாக்கி அரசியல் தளத்திலும் பிரவேசித்து வெற்றியாளர்களாகத் திகழ வேண்டும் என்ற ஒரு கனவு எமது தமிழ் மக்கள் மத்தியில் சமூக அக்கறை கொண்ட பலருக்குத் தோன்றியது.

எனவே ஆர்வமுள்ளவர்கள் கூடிப் பேசி அதற்கு தேவையான நடவடிக்கைகளை படிப்படியாக செயற்படுத்தத் தொடங்கினார்கள். இவ்வாறான அந்தப் பயணத்தின் போது மறுபக்கத்தில் எமது சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் மத்திய, மாகாண மற்றும் உள்ளாட்சி அரசாங்கங்களில் எமது மொழியைப் பேசும் இளம் தலைவர்கள் உருவாகியிருந்தார்கள். இவ்வாறான காலப்பகுதியில் "பழம் நழுவிப் பாலில் விழுந்தது போன்று எம்மவர்கள் கண்ட கனவான "தமிழ்ச் சமூக மையம்" என்னும் கனவு பலிக்கும் நிலையை எட்டியது போன்ற உணர்வு அனைவர் மத்தியிலும் தோன்றத் தொடங்கியது.

## கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் நூல்களின சங்கமம் (நூல் கண்காட்சி) - 2026

காலம் - ஜூன். 21. 2026 - ஞாயிற்றுக்கிழமை
(காலை 10 மணி முதல் மாலை 6 மணிவரை )
இடம் - தமிழிசைக் கலாமன்றம்
1120 Tapscott Rd Scarborough ON

படைப்பாளிகள் தங்கள் நூல்களை ' நூல்களின சங்கமம்' நிகழ்வில் காட்சிப் படுத்தவும், விற்பனை செய்யவும் முடியும். அதற்கான கட்டணம் முப்பது கனடிய டொலர்கள் ($ 30.00) மட்டுமே. அத்துடன் இணைந்ததாக, நூல் அறிமுகம் அல்லது வெளியீடு செய்வதாயின் 30 நிமிடங்கள் தரப்படும். அதற்கான மேலதிக கட்டணம், கனடிய டொலர்கள் நாற்பது ($ 40.00) ஆகும். இந்தக் கட்டணத்துடன் எத்தனை நூல்களையும் காட்சிப்படுத்தி விற்பனை செய்யலாம்.

### விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் -- ------------------------------------------------------------

தொலைபேசி எண் -- ------------------------------------------------------------

மின்னஞ்சல் -- ------------------------------------------------------------

நூல்களின் பெயர்கள் -- ------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------

அ) காட்சிப்படுத்தல் / விற்பனை ---------------------------------------- (30$) --------

ஆ) நூல் அறிமுகம் / வெளியீடு ---------------------------------------- (40$) --------

காட்சிப்படுத்தும் நூல்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாவார்கள். இன, மத முரண்பாட்டை தோற்றுவிக்கும் நூல்கள் அனுமதிக்கப்பட மாட்டாது. வெளிநாடுகளில் வாழும் எழுத்தாளர்கள் தங்கள் நண்பர்கள் உறவினர் ஊடாக பங்கு கொள்ளலாம்.

படைப்பாளிகள் அனைவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். நன்றி.

அன்புடன்
நிர்வாக சபை - கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்.

தொடர்புக்கு - ரவி கனகசபை ( தலைவர்) - 416 301 9027
- முனைவர் வாசுகி நகுலராஜா ( செயலாளர்) - 647 208 4148

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ்க் கனடியர்களின் எழுச்சியாக விளங்கும் உணர்வை ஊட்டிய சங்கநாதம்

நிதியை திரட்டுவதில் பல மாதங்களாக தங்கள் அர்ப்பணிப்போடு ஈடுபடுத்தி தங்கள் எண்ணிக்கையை திரட்டும் பணியில் உழைத்த நூற்றுக்கணக்கான தனிநபர்கள் மற்றும் தமிழர் அமைப்புக்கள் ஊடக நண்பர்கள் என அனைவரும் அங்கு அமைதியாக நின்றிருந்தார்கள். அவர்களது பெயர்கள் அழைக்கப்பெற்றபோது ஆர்ப்பாட்டம் எதுவும் இன்றி மேடையில் அணிவகுத்தார்கள்.

இதே போன்று "தமிழர் சமூக மையம்" என்னும் கனவை நனவாக்குவதற்கு ஆரம்பத்திலிருந்து உழைத்த கீர்த்தனா -நேத்ரா ரொட்றிக்கோ மற்றும் சிவா போன்ற செயற்பாட்டாளர்களின் பெயர்களையும் நிதி சேகரிப்பில் அதன் எல்லையைத் தாண்டும் முயற்சியில் தலைமை தாங்கிச் செயற்பட்ட சாந்தா பஞ்சலிங்கம் மற்றும் நவஜீவன் ஆகியோரின் பெயர்களையும் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி மேடையில் நின்றவண்ணம் உச்சரித்து மகிழ்ந்த போது சபையிலிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ச் சமூக உணர்வு மிக்க எம்மவர்கள் எழுப்பிய கரகோசத்தின் அதிர்வலைகள் இன்னும் எம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

அன்புடன், மலையன்பன்!

---

நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று எமது மக்கள் கண்ட "தமிழ்ச் சமூக மையம்" என்னும் கனவு நிதர்சனமாகி நனவாக மாறும் நிலை தோன்றுவதற்குரிய அறிகுறிகள் தென்பட்டன. எமக்கான மையம் எழுந்து நிற்கும் நிலத்தை வழங்க ரொறன்ரோ மாநகர சபையும் மேலும் ஆரம்ப நிதி ஒதுக்கீடுகளாக கனடாவின் மத்திய அரசு வழங்கிய 13 மில்லியன் நிதியும் நிதியும் ஒன்றாரியோ மாகாண அரசு வழங்கிய 12 மில்லியன் நிதியும் உறுதி செய்யப்படுவதற்கு எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் துணையாக இருக்க எம்மவர்களின் மனங்களில் நம்பிக்கைகள் "துளிர்" விட்டன.

எவ்வாறு இருந்தாலும் எமது தமிழ் மக்களின் பங்களிப்பாக எதிர்பார்க்கப்பட்ட 13 மில்லியன் டாலர்களை திரட்டுவதில் ஈடுபாட்டுடன் செயற்படும் வகையில் பலர் இணைந்து தொழிற்பட்டார்கள். அவர்களில் தொழிலதிபர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் அதன் தலைமைத்துவத்தை கைகளில் எடுத்திட அவரது நண்பர்கள் பலர் இணைந்து கொண்டார்கள். இன்னொரு பக்கத்தில் இந்த திட்டத்திற்குத் தேவையான நிர்வாகப் பணிகளைக் கவனிப்பதற்கு கீர்த்தனா மற்றும் நேத்திரா ரொட்றிகோ, சிவா உட்பட பலர் தஙகளை அர்ப்பணிக்க எமது நம்பிக்கையான பயணம் வெளிச்சத்தை நோக்கி நகர்ந்தது. நிதி சேகரிப்பில் இணைந்து கொண்ட "புதிய வெளிச்சம்" நவஜீவன் குழுவினர் தாமாக இரண்டு மில்லியன் டாலர்களை திரட்டும் முயற்சியில் வெற்றி கண்டார்கள். இதனால் எதிர்பார்க்கப்பெற்ற தொகையிலும் பார்க்க சுமார் இரண்டு மில்லியன் டாலர்கள் தற்போது எமது சமூகத்தின் நன்கொடை நிதி சேகரிப்பில் திரண்டு எம்மை தலை நிமிர வைத்துள்ளது. இந்த திட்டத்தில் பங்களித்த அனைவருக்கும் நாம் தலைசாய்த்து மதிப்பளிக்க வேண்டும்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னாரில் சில பாதைகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இதுவரை திறக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் சுற்றுச்சூழல் மற்றும் தொல்லியல் பாதுகாப்பு ஆகியவையே என்கிறார் அமைச்சர் பிமல்!



- எஸ்.ஆர்.லெம்பேட் (10-02-2026)

மன்னாரில் இருந்து புத்தளம் செல்வதற்கான வில்பத்து வனப்பகுதியை ஒட்டியுள்ள பாதையை திறப்பதில் உள்ள சிக்கல்களை கருத்தில் கொண்டு, அதற்கு மாற்றாக பயன்படுத்தக்கூடிய மாற்றுப் பாதைகள் குறித்த பரிந்துரைகளை முன்வைப்பதே தற்போதைய அரசின் நோக்கம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மன்னாரில் 10ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை (10)-02-2026) மாலை நடைபெற்ற விசேட அபிவிருத்தி குழு கூட்டத்தில் மன்னாரில் இருந்து இலவன் குளம் ஊடாக புத்தளம் செல்லும் பாதை தொடர்பாக சர்ச்சை குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சில பாதைகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இதுவரை திறக்கப்படாமல் இருப்பதற்கு சுற்றுச்சூழல் மற்றும் தொல்லியல் பாதுகாப்பு காரணங்கள் உள்ளன. இந்தப் பாதைகள் திறக்கப்படாததால் மன்னார் மாவட்ட மக்களுக்கு பெரும் அசௌகரியம் ஏற்பட்டுள்ளதை நாம் அறிவோம்.

அதே நேரத்தில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மற்றும் தொல்லியல் சட்ட வரம்புகள் காரணமாக சில பாதைகள் திறக்க முடியாத நிலைமை இருக்கிறது. இந்த விவகாரம் தொடர்பாக, சம்பந்தப்பட்ட சுற்றுச்சூழல் அதிகாரிகள் மக்களின் கவலைகளை அறிந்துள்ளனர். எனினும் அதற்கான சட்டம் மற்றும் நிர்வாக வரம்புகள் உள்ளன.

இந்த நிலைமை காரணமாக, வில்பத்து வனப்பகுதியை ஒட்டியுள்ள இந்தப் பாதைக்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய மாற்றுப் பாதைகள் குறித்து பரிந்துரைகளை முன்வைப்பதே எமது தற்போதைய நோக்கமாக உள்ளது.

இதற்காக சுற்றுச்சூழல் அமைச்சும் எமது அமைச்சும் இணைந்து எதிர்காலத்தில் விரிவான கலந்துரையாடல்களை நடத்தவுள்ளோம்.

இவ்விடயத்தில் சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர்களின் நிலைப்பாடுகள் காரணமாக சில தடைகள் இருப்பதும் உண்மை. இருப்பினும், பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் சட்ட வரம்புகளையும் மதித்து தீர்வு காண வேண்டிய அவசியம் உள்ளது.

எதிர்காலத்தில் இந்த விவகாரம் தொடர்பான முடிவுகள், பொதுமக்கள் மத்தியஸ்த கலந்துரையாடல்கள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பரிந்துரைகள் மற்றும் நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும்.

அத்துடன் நீதிமன்ற உத்தரவுகளை முழுமையாக மதித்து, அதற்கிணங்க எமது நடவடிக்கைகள் அமையும்.

இந்த விவகாரம் தொடர்பாக, சம்பந்தப்பட்ட சுற்றுச்சூழல் அதிகாரிகள் பொது மக்களின் கவலைகளை அறிந்துள்ளதுடன், அதற்கான சட்ட மற்றும் நிர்வாக கட்டுப்பாடுகள் உள்ளன என்பதும் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வில்பத்து வனப்பகுதியை ஒட்டியுள்ள பாதையை திறப்பதில் உள்ள சிக்கல்களை கருத்தில் கொண்டு, அதற்கு மாற்றாக பயன்படுத்தக்கூடிய மாற்றுப் பாதைகள் குறித்த பரிந்துரைகளை முன்வைப்பதே தற்போதைய அரசின் நோக்கம்.

இதற்கு சுற்றுச்சூழல் அமைச்சு, சம்பந்தப்பட்ட அமைச்சும் இணைந்து எதிர்காலத்தில் விரிவான கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதாக அவர் கூறினார்.

சுற்றுச்சூழல் செயற் பாட்டாளர்களின் நிலைப்பாடுகள் காரணமாக சில தடைகள் இருப்பதும் உண்மை என அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், பொதுமக்களின் நலனை முதன்மையாகக் கொண்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் சட்ட வரம்புகளையும் மதித்து தீர்வு காண வேண்டிய அவசியம் உள்ளதாக அமைச்சர் வலியுறுத்தினார்.

இந்த விவகாரம் தொடர்பான எதிர்கால முடிவுகள், பொதுமக்கள் மத்தியஸ்த கலந்துரையாடல்கள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பரிந்துரைகள் மற்றும் நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் என்றும், நீதிமன்ற உத்தரவுகளை முழுமையாக மதித்து அதற்கிணங்க அரசின் நடவடிக்கைகள் அமையும் என அமைச்சர் விமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் 34 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு புதிய நியமனங்கள்

- எஸ்.ஆர்.லெம்பேட் (11-02-2026)







மன்னார் பிரதேச செயலகத்தில் பொருளா-தார அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக (EDO) கடமை ஆற்றிய 34 பேருக்கு 11ம் திகதி புதன்கிழமை அன்றைய தினம் “சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்” (CO) நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக (DO) கடமையாற்றி வந்த 34 பேர், கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சிற்கு மாற்றப்பட்டு சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்களாக (CO) நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நியமன கடிதங்களை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் மன்னார் பிரதேச செயலகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர், நடுத்தர வர்க்கத்தில் உள்ள அரச ஊழியர்கள் மற்றும் வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள மக்கள் மீது எமது அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.

இவ்வாறான மக்களைப் பொருளாதார ரீதியாக முன்னேற்றக் கூடிய திட்டங்களை நாங்கள் வகுத்திருக்கிறோம். இனிவரும் காலங்களில் அதற்குரிய பலன்களை நீங்கள் அனுபவிப்பீர்கள். எனவே உங்களுக்கு வழங்கப்பட்ட பணிகளில் நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும்.

அதிலே ஏதேனும் இடர்பாடுகள் ஏற்பட்டால் நீங்கள் பிரதேச செயலாளர் அல்லது பிரஜா சக்தி தலைவர்கள் ஊடாக அதை தீர்த்துக்கொள்ள வேண்டும்.

எல்லாருக்குமே இது ஒரு புதிய பணி எந்த ஒரு விடயத்தையும் தனியாக முடிவெடுக்கும் போது தான் பிரச்சனைகள் உருவாக்குகின்றது. எனவே நீங்கள் குழுவாக சேர்ந்து செயல்பட வேண்டும்.

கடந்த அரசாங்கங்களின் காலங்களிலே வழங்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு ஒரு தொகுதியாக தான் சென்று சேர்ந்திருக்கிறது.

டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் நிறுவனத்தினால் வெளியிடப் பட்டிருந்த நாடுகளுக்கு இடையேயான ஊழல் சுற்றறிக்கையில் 121வது இடத்தில் இருந்த இலங்கை 107 வது இடத்திற்கு முன்னேறி உள்ளது.

இடங்கள் முன்னோக்கி வந்துள்ளது 121வது இடத்திலே இருப்பதென்றால் எவ்வகையான ஊழல்கள் கடந்த காலங்களில் நடைபெற்றது என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

எனவே ஊழல் மோசடிகளை எமது நாட்டில் இருந்து முற்றும் முழுமையாக துடைத்து எறிவதற்காக தான் இவ்வாறான திட்டங்களை எமது அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதில் எல்லாம் வெளிப்படைத் தன்மையாக இருக்கும். பாதிப்படைந்த மக்கள் மேலும் பாதிக்கப் படாமல் இருப்பதற்கு இவ்வாறான திட்டங்கள் உதவும். எனவே நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை கட்டி எழுப்புவதற்காக செயல்பட வேண்டும்.

பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் உங்களுக்குரிய வரப்பிரசாதங்களை அரசாங்கம் அவ்வப்போது வழங்கும். அத்துடன் உங்களுக்கான மேலதிக கொடுப்பனவுகளை விரைவாக கிடைப்பதற்குரிய ஒழுங்குகளை நிச்சயமாக அமைச்சரவை மட்டத்திலேயே கலந்துரையாடி பெற்றுத் தருவோம் என்றார்.

குறித்த நியமனம் வழங்கும் நிகழ்வில், மன்னார் பிரதேச செயலாளர் ம.காந்தீபன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜே.ஜூட் மைக்கேல் ராஜ் ஆகியோர் கலந்து கொண்டதுடன் 34 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு தங்களது நியமன கடிதத்தை பெற்றுக் கொண்டனர்.



கனடிய செய்திகள்
Canadian News

## Tamil Heritage Month Celebrations, hosted by Stouffville Tamils' Association held on January 30th, 2026, in City of Stoffville!

# "ஸ்ரோவில் தமிழர் சங்கம்" ஏற்பாட்டில் 2026ம் ஆண்டிற்குரிய "தமிழர் மரபுரிமை" மாதக் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது

கனடா ஸ்ரோவில் நகரத்தில் வாழும் தமிழ் மக்களால் ஆரம்பிக்கப்பெற்று தொடர்ச்சியாக இயங்கிவரும் "ஸ்ரோவில் தமிழர் சங்கம்" தனது 2026ம் ஆண்டிற்குரிய "தமிழர் மரபுரிமை" மாதக் கொண்டாட்டத்தை கடந்த 30-01-2026 அன்று நடத்தியது.

அன்றைய தினம் கலைநிகழ்ச்சிகள் மற்றும் உரைகள் ஆகியன இடம்பெற்றன. அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரச-யியல் தலைவர்கள் ஆகியோரின் வாழ்த்துரைகளும் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மிகவும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த இந்த விழாவில் ஸ்காபுறோவில் அமையவுள்ள "தமிழர் சமூக மையம்" கட்டட நிதிக்காக மக்கள் வழங்கிவரும் அன்பளிப்புக்கள் வரிசையில் ஸ்ரோவில் நகரில் வாழும் தொழிலதிபர் தாஸ் தேவதாஸ் மற்றும் சட்டத்தரணி லக்சுமி வாசன் ஆகியோர் குடும்பங்கள் வழங்கிய முறையே 25,000 டாலர்கள் மற்றும் 10,000 டாலர்கள் ஆகியவற்றிக்கான மாதிரிக் காசோலைகள் தமிழ்ச் சமூக மைய நிதி சேகரிப்புக்குழுவின் சார்பில் ரமணன் சந்திரசேகரமூர்த்தி அவர்கள் பெற்றுக்கொண்டார். படங்களில் "ஸ்ரோவில் தமிழர் சங்கத்தின் முக்கிய உறுப்பினர்களான சிவன் இளங்கோ மற்றும் சுந்தரலிங்கம் ஆகியோரும்" நிற்பதைக் காணலாம்.

*- படங்கள்: Ravi Atchuthan - - Uthayan LJI Journalist Arjune -*










Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்
Dr. Pushpa.V & Associates
Dentist
New Patients Welcome
Open 7 Days a week
Sunday by Appointment only
சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்
We are accepting CDCP insurance.

**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187
**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

# தன்னைத் தானே தோற்கடிப்பது?



**மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கத்தக்கதாக இளம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். சிறீதரனை அகற்றும் பொழுது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளில் முக்கியமானது, அவர் அரசியலமைப்பு பேரவையில் ஒரு படை அதிகாரிக்கு ஆதரவாக வாக்களித்தார் என்பதுதான். ஆனால் சாணக்கியன் யார்? யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ராஜபக்சக்களோடு நின்றவர். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அவர்களோடு காணப்பட்டவர். அவர்களுடைய கட்சியின் அமைப்பாளராகச் செயல்பட்டவர்.**

---

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**நா**டாளுமன்றக் குழுத் தலைவர் பதவியில் இருந்து சிறீதரன் நீக்கப்பட்டு சாணக்கியன் நியமிக்கப்பட்டிருக்கிறார். அதை ஒரு வெற்றியாக சாணக்கியனின் ஆதரவாளர்கள், சுமந்திரன் அணியைச் சேர்ந்தவர்கள் ஆங்காங்கே கொண்டாடினார்கள். உலகமே வியக்கும் வெற்றிகளைக் கொண்டாடிய தமிழ் மக்கள் இப்பொழுது இப்படிப்பட்ட உண்மையான தோல்விகளை அற்ப வெற்றிகளாகக் கொண்டாடும் மக்களாக சிறுத்துப் போய்விட்டார்கள்? தமிழரசுக் கட்சி என்பது 75 வயதான ஒரு கட்சி. தனது உட்கட்சிப் பகையை பிரதிபலிக்கும் ஒரு வெற்றியைக் கொண்டாடக்கூடாது என்று தனது தொண்டர்களுக்குச் சொல்லும் மாண்பை அந்தக் கட்சி இழந்து விட்டதா? ஏற்கனவே மாவையின் இறுதி நாள் நிகழ்வில் சுடலை வரை மோதல் வந்தது. அண்மையில் மாவையின் முதலாம் ஆண்டு நினைவு நாளிலும் அந்த மோதல் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியது. மிகவும் "கேவலம்" இது.

நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவிக்கு சாணக்கியன் நியமிக்கப்பட்டதை கிழக்கில் உள்ள மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் வரவேற்கவில்லை என்று தெரிகிறது. மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கத்தக்கதாக இளம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். சிறீதரனை அகற்றும் பொழுது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளில் முக்கியமானது, அவர் அரசியலமைப்பு பேரவையில் ஒரு படை அதிகாரிக்கு ஆதரவாக வாக்களித்தார் என்பதுதான். ஆனால் சாணக்கியன் யார்? யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ராஜபக்சக்களோடு நின்றவர். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அவர்களோடு காணப்பட்டவர். அவர்களுடைய கட்சியின் அமைப்பாளராகச் செயல்பட்டவர்.

அவருடைய ஆதரவாளர்கள் உட்கட்சி மோதலில் கிடைத்த வெற்றியை வெடி கொளுத்தி, இனிப்புக் கொடுத்து, பனர் கட்டி கொண்டாடியிருக்கிறார்கள். இந்த கொண்டாட்டங்கள் நமக்கு உணர்த்துவது எதை என்றால், உட்கட்சிப் பகை எந்த அளவுக்கு கூர்மையானதாக இருக்கிறது? எந்த அளவுக்கு நாகரீகமற்றதாக மாறியிருக்கிறது என்பதைத்தான். அது தவறு என்று சாணக்கியனுக்கோ அல்லது தொண்டர்களுக்கோ சொல்லக்கூடிய மூப்பும் முதிர்ச்சியும் உள்ள ஆட்கள் கட்சிக்குள் இல்லை என்று தெரிகிறது.

75 வயதான கட்சிக்குள் முதன் முதலாக தலைவர் தெரிவிற்காக நடந்த ஒரு தேர்தல். அதில் தெரிவு செய்யப்பட்டவர், கடந்த இரண்டு ஆண்டுகளாக தலைமைப் பொறுப்பை ஏற்கவிடாமல் தடுக்கப்பட்டு வருகிறார். படிப்படியாக கட்சிக்குள்ளேயே முடக்கப்பட்டு வருகிறார். 75 வயதான ஒரு கட்சியின் உட்கட்சி ஜனநாயகத்தை விளங்கிக் கொள்ள இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா?

இதன் பொருள், சிறீதரன் கிளிநொச்சியில் ஜனநாயகச் செழிப்பான ஒரு சூழலைப் பேணி வருகிறார் என்பதல்ல. அங்கே அவர் தன்னுடைய அரசியல் எதிரிகளை அணுகும் விதமும், அவருடைய ஆதரவாளர்கள் அரசியல் எதிரிகளை விமர்சிக்கும் விதமும் பண்பானவைகளோ அல்லது அரசியல் நாகரீகத்தைப் பேணுகின்றவையோ அல்ல.தன்னுடைய எதிரிகளை மேடைகளில் பகிரங்கமாக பெயர் சொல்லி விமர்சிக்கிறார். அவருடைய அணியைச் சேர்ந்தவர்கள் சமுக வலைத் தளங்களில், முகத்தைக் காட்டியும், முகத்தைக் காட்டாமலும் வந்து, தமது அரசியல் எதிரிகளின் குடும்பத்தை இழுத்து, சகோதரர்களை இழுத்து விமர்சிக்கிறார்கள். தமிழரசுக் கட்சியின் உட் கட்சி ஜனநாயகத்தில் குற்றம் காண்பது என்பது அதன் ஒரு பகுதியாக கிளிநொச்சியில் காணப்படும் அரசியல் விமர்சனச் சூழலையும் சுய விமர்சனத்திற்கு உட்படுத்துவதுதான்.

எந்தத் தேசியவாதத் தராசில் வைத்து சிறீதரன் தனது எதிரிகளை நிறுத்தாரோ, அதே அதே தேசியவாதத் தராசில் வைத்து சுமந்திரன் அணி அவரை நிறுக்கிறது. அதன்மூலம் அவருடைய வாக்காளர்கள் மத்தியில் அவரை மதிப்பிறக்கம் செய்வதே அவர்களுடைய நோக்கம். அதை கஜேந்திரக்குமார் அணி செய்தால் அதற்கு ஒரு பொருள் இருக்கும். ஆனால் சுமந்திரன் செய்தால் அதற்குப் பொருள் இருக்காது. ஏனென்றால் சுமந்திரன் ஏற்கனவே தமிழ்த் தேசிய நீக்கத்துக்கு தலைமை தாங்குகிறார் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ளார். அவர் எவ்வளவு கெட்டிடித்தனமானவராக இருந்த போதிலும்,எத்தனை சதி சூழ்ச்சிகளைச் செய்த போதிலும், கட்சியை முழுமையாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாதிருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக முடக்கப்பட்டு வரும் சிறீதரனும் தனது தலைமைத்துவத்தை நிரூபிக்க தவறிவிட்டார். அவரை நம்பி வாக்களித்த கட்சிக்காரர்களுக்கும் அவர் தலைமை தாங்கவில்லை. மக்களுக்கும் நம்பிக்கையூட்டும் விதத்தில் அவர் நடந்து கொள்ளவில்லை. அண்மையில் யாழ்ப்பாணம் வைஎம்சிஏ மண்டபத்தில் நடந்த பெப்ரவரி நான்கு நிகழ்வின் போது, தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசசன் சிறீதரனை குறித்து உள்ளூர் பழமொழி ஒன்றை எடுத்துக் காட்டினார். "பனங்கிழங்கு முத்தினால் நாராகிவிடும்" என்பதே அந்தப் பழமொழி. சிறீதரனின் தலைமைத்துவத்தின் நிலைமையும் அப்படித்தானா? தனது கடைசிக் கட்டத்தில் மாவை சேனாதிராஜாவும் அப்படித்தான் காணப்பட்டார்.

நாடாளுமன்ற தேர்தலில் தோற்றவர் கட்சிக்குள் பலமாக இருக்க முடியாது என்ற வாதம் சரியாக இருந்தால், சுமந்திரன் எப்படி கட்சிக்குள் தீர்மானிக்கும் சக்தியாக மேலெழ முடிந்தது? அண்மையில் மாவையின் முதலாம் ஆண்டு நினைவு அனுஷ்டிக்கப்பட்டது. அங்கேயும் உட்கட்சிப் பூசல்கள் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தின. மாவை துணிச்சலாகவும் மிடுக்காகவும் முடிவுகளை எடுக்கத் தவறியதன் விளைவாக தானும் தோற்று கட்சியையும் தோற்கடித்து விட்டார். அவர் இறந்து ஓராண்டின் பின்னரும் கட்சி ஒரு சீருக்கு வரவில்லை என்பதைத்தான் அண்மையில் அவருடைய முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நமக்கு உணர்த்தின.

மாவையோடு ஒப்பிடுகையில் சிறிதனிடம் தலைமைப் பண்பு அதிகம். மாவை அளவுக்கு அவர் நசிய மாட்டார். தனது மாவட்டத்தில் கட்சிக் கட்டமைப்பை பலமாகக் கட்டி எழுப்பி வைத்துள்ளார். அவருடைய வாக்கு வங்கி போரால் பாதிக்கப்பட்டவர்களை அதிகம் பிரதிபலிப்பது. அதைவிட மேலகமாக, தீவு மைய, கிளிநொச்சி மைய வாக்குகளும் அங்கே உண்டு. கட்சியை விட்டு நீங்கினாலும் கிளிநொச்சியில் சிறீதரன் ஒரு பலமான சவாலாக இருப்பார். ஆனால் இங்கே பிரச்சனை அதுவல்ல. தமிழ்த் தேசிய அரசியலின் பிரதான இலக்கு தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டி, பலமான பேரம் பேசும் சக்தியாக கொழும்பிலும் உலக சமூகத்தின் முன்னும் முன்னிறுத்துவதுதான். அதை சிறீதரன் செய்வார் என்று நம்பத்தக்கதாக கடந்த இரண்டு ஆண்டுகளும் அமையவில்லை.

அண்மையில் ஒரு காணொளி ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் அவர் பொறுமைக்கும் சகிப்புத் தன்மைக்கும் முன்னுதாரணமாக கட்சிக்குள் தொடர்ந்தும் இருக்கப் போவதாக பொருள் கொள்ளத்தக்க விதத்தில் பதில் கூறியிருந்தார். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கட்சிக்குள் ஒட்டிக் கொண்டிருப்பதனால் அவர் தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மட்டுந்தான் தக்கவைத்துக் கொண்டார். கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் தனது தலைமைத்துவத்தை எந்தளவுக்கு ஸ்தாபித்திருக்கிறார்?

சுமந்திரனைப் பொறுத்தவரை இப்பொழுதும் கட்சியை முழுமையாக அவருடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. சிறீதரனை கட்சிக்குள் இருந்து அகற்றினால் மட்டும்தான் அவருக்கு முழு வெற்றி. ஆனால் அதை அவரால் இன்றுவரை செய்ய முடியவில்லை. சிறீதரன் மீது நிர்ப்பந்தங்களைப் பிரயோகித்து, அவமானப்படுத்தி அவராக கட்சியை விட்டு விலகும் அளவுக்கு நிர்பந்திப்பது என்று சுமந்திரன் சிந்திக்க கூடும். ஏனென்றால் இதே விதமான உத்தியைத்தான் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்த போது பங்காளிக் கட்சிகள் மீதும் பிரயோகித்தார். பங்காளிக் கட்சிகளுக்கு நெருக்கடியைக் கொடுத்து அவர்களாக விலகப் பண்ணினார். அப்படித்தான் விக்னேஸ்வரனின் விடையத்திலும். ஆனால் அவருடைய உத்திகளின் விளைவுகள் என்ன? முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதைக்கப்பட்டது. இப்பொழுது தமிழரசுக் கட்சியும் சிதைக்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டு கால கயிறு இழுத்தல் போட்டியில் யாரும் முழு வெற்றி பெறவில்லை. இது 75 வயதான கட்சியின் உள்விவகாரங்களை முழுமையாக தனது கைக்குள் கொண்டு வரத் தக்க தலைவர் யாரும் இப்பொழுது கட்சிக்குள் இல்லை என்பதைத்தான் காட்டுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாகவும் சுமந்திரனால் கட்சியை முழுமையாக தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. 2024 இல் கட்சிக்குள் நடந்த தேர்தலில் தோற்கடிக்கப்பட்டதையும் அதே ஆண்டின் இறுதியில் தமிழ் மக்களால் தோற்கடிக்கப்பட்டதையும் அவரால் ஜீரணிக்க முடியவில்லை.

கொழும்பில் அவர் சவால்கள் மிகக் குறைந்த ஒரு சட்டவாளராகக் காணப்படுகிறார். ஆங்கிலம் பேசும் உயர் குழாத்தின் மத்தியிலும் அரசியல் சமூகம், ராஜதந்திர சமூகம், ராணுவ சமூகம் மற்றும் சிவில் சமூகங்களின் மத்தியிலும் மதிக்கப்படும் தமிழ் அரசியல்வாதியாக அவர் காணப்படுகிறார். தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று கொழும்பில் ஒரு தீர்மானகரமான சக்தியாக அவர் வலம் வந்தார். 2024 அவரைப் பொறுத்த வரை ஒரு கெட்ட ஆண்டு. தோல்விகரமான ஆண்டு. அந்த ஆண்டில் கிடைத்த தோல்விகளால் கொழும்பில் அவருடைய மதிப்பு குறைந்து போய் விடக்கூடாது என்று அவர் அந்தரப்படுகிறார். ஆனால் அவருடைய தந்திரமான, புத்திசாலித்தனமான நடவடிக்கைகளின்மூலம் கட்சியை அவருடைய முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இன்றுவரை முடியவில்லை.

சிறீதரன் கட்சியை விட்டு நீங்கினால் கட்சிக்குள் காணப்படும் சுமந்திரன் எதிர் அணி ஒரு புதிய அணியாக மேலெழக்கூடும். தமிழரசுக் கட்சியானது வெல்லும் கட்சி என்ற நம்பிக்கை உடைக்கப்படுமாக இருந்தால் அக்கட்சிக்குள் இப்பொழுது ஒட்டிக் கொண்டிருக்கும் பலரும் கழண்டு போய் விடுவார்கள்.

அந்த நம்பிக்கை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் குறிப்பிடத்தக்க அளவுக்கு உடைக்கப்பட்டது. தேசிய மக்கள் சக்திக்கும் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்ப் பகுதிகளில் ஒரே எண்ணிக்கையான ஆசனங்கள்தான். இப்பொழுதும் தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் தீராத உட் பகையை தேசிய மக்கள் சக்தி நம்பிக்கையோடு பார்த்துக் கொண்டிருக்கிறது, மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு இடைப்பட்ட காலத்தில் தனக்கு புதிய வாய்ப்புகள் திறக்கப்படுமா என்று எதிர்பார்ப்போடு.

---

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியும் ஸ்ரீ வரசித்திவிநாயகர் தேவஸ்தானமும் இணைந்து வழங்கிய "தமிழர் மரபுரிமை மாத விழா – 2025"

கனடாவில் கடந்த பல வருடங்களாக மொழியையும் சமயத்தையும் எமது சிறார்கள் மத்தியில் தக்கவைப்பதற்காவும் அவர்களுக்கு அறிவூட்டுவதற்காகவும் அரும்பணியாற்றிவரும், கனடா ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியும் ஸ்ரீ வரசித்திவிநாயகர் தேவஸ்தானமும் இணைந்து வழங்கிய "தமிழர் மரபுரிமை மாத விழா - 2025" கடந்த சனிக்கிழமை 7ம் திகதி கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நிறுவனங்களின் அதிபரும் சிவாச்சாரியப் பெருமகனாருமாகிய சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள் அவர்கள் அவரது துணைவியார் ஸ்ரீமதி ஜெயந்தி விஜயகுமாரக் குருக்கள் மற்றும் ஜெயா ஐயா ஆகியோரும் மற்றும் சிவாச்சாரியப் பெருமக்களும் இந்துக் கல்லூரியின் ஆசிரியர்கள் அதிபர் மற்றும் மாணவ மாணவிகளும் தங்கள் அர்ப்பணிப்பான ஈடுபாட்டை இந்த விழாவின் மீது கொண்டிருந்ததால், அன்றைய "தமிழர் மரபுரிமை மாத விழா - 2025" சிறப்பாக நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களின் உரைகள் மற்றும் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் எமது மொழியின் பண்டைய சிறப்புக்களையும் தொன்மையையும் காட்டும் வகையிலும் தமிழ்ப் பண்பாட்டைக் காட்டும் வகையில் நெறிப்படுத்தப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.







*- படங்களும் செய்தியும்: சத்தியன் -*







# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

# ரில்வின் சில்வா மற்றும் ஜெய்சங்கர் சந்திப்பின் பின்னணி என்ன சொல்கிறது?



இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலும், தெற்காசிய பூகோள அரசியல் நகர்வுகளும் தொடர்பான முக்கிய முன்னேற்றமாக ஜே.வி.பி (JVP) கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கொண்ட இந்தியப் பயணம் பார்க்கலாம். அத்துடன் இது தொடர்பாக கவனிக்க வேண்டிய முக்கிய நிகழ்வாகவும் மதிப்பிடப்படுகிறது.

தற்போதைய இலங்கை அரசின் முக்கிய தீர்மானங்கள் மற்றும் கொள்கை நகர்வுகளில் தாக்கம் செலுத்தும் முக்கிய அரசியல் நபராகக் கருதப்படும் டில்வின் சில்வா, தனது குழுவுடன் இந்தியா சென்றடைந்தார்.

இந்திய கலாச்சார உறவு குழுவின் அழைப்பின் அடிப்படையில் இந்த பயணம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டாலும், இந்திய தலைநகர் புதுடெல்லியில் பல மட்டங்களில் முக்கிய சந்திப்புகள் நடைபெற்றதாக அறியப்படுகிறது.

இந்த பயணத்தின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் சந்திப்பு நடைபெறவில்லை என்றாலும், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் உடன் முக்கியமான கலந்துரையாடல் நடைபெற்றது. அந்த சந்திப்பில் இலங்கையின் பொருளாதார நெருக்கடி, பொருளாதாரத்தை மீளக் கட்டியமைக்கும் வழிகள், இருநாட்டு வர்த்தக மற்றும் அரசியல் தொடர்புகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் விவாதிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆயுத போராட்ட இயக்க அடிப்படையிலிருந்து வளர்ந்த ஜே.வி.பி அரசியல் அமைப்பின் முக்கிய நிர்வாகியாக அதன் பொதுச்செயலராக ரில்வின் சில்வா செயல்பட்டு வருகிறார். அரசாங்கத்தின் நேரடி பதவிகளில் இல்லாவிட்டாலும், அரசியல் தீர்மானங்கள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகளில் அவரின் செல்வாக்கு மிகப்பெரியது. குறிப்பாக அண்டை நாடுகளுடனான உறவுகள், வல்லரசுகளுடன் தொடர்பு பேணும் நடைமுறைகள் போன்றவற்றில் அவர் முக்கிய வழிகாட்டியாக செயல்படுவதாகக் கருதப்படுகிறது.

ரில்வின் சில்வாவின் இந்தியப் பயணம் தற்போது அரசியல் வட்டாரங்களில் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. இதற்கு முன்னதாக இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு, அதிபர் அனுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட அரசின் முக்கிய அதிகாரிகள் தமிழ் தேசிய கட்சித் தலைவர்கள் மற்றும் தமிழ் அரசியல் பிரதிநிதிகளை சந்தித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அந்த விஜயத்தின் போது இந்தியா, இலங்கையின் பொருளாதார மற்றும் மனிதாபிமான சூழலை கருத்தில் கொண்டு 400 மில்லியன் அமெரிக்க டாலருக்கும் நிகரான உதவி திட்டங்களை அறிவித்திருந்தது. குறிப்பாக தமிழ் தேசிய கட்சிகளுடனான கலந்துரையாடல்களும் இடம்பெற்றிருந்ததால், இருநாட்டு அரசியல் உறவுகளில் புதிய நகர்வுகள் ஏற்படுகின்றன என்ற பார்வை நிலவியது. மாகாண சபை தேர்தல்கள் இடம்பெற வேண்டும் என்ற வலியுறுத்தல்களும் நிலவின.

இந்த பின்னணியிலேயே ரில்வின் சில்வா தலைமையிலான குழு புதுடெல்லியில் இந்திய அதிகாரிகளை சந்தித்திருப்பது முக்கிய அரசியல் நகர்வாக பார்க்கப்படுகிறது. அந்த குழுவில் இரண்டு தமிழ் பிரதிநிதிகள், குறிப்பாக வடக்கில் இருந்து இளங்குமரன் எம்.பி. உள்ளிட்டோர் அழைத்து செல்லப்பட்டமையானது யாழ்பாணத்தின் குறிப்பாக தமிழரின் நிலை, தமிழர் அரசியல் தொடர்பான விவகாரங்களும் விவாதிக்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தை வலுப்படுத்துகிறது. இவ்விவாதங்கள் முழுமையாக வெளிப்படுத்தப்படாதபோதிலும், தமிழர் அரசியல் உரிமைகள், புதிய அரசியலமைப்பு மற்றும் நிர்வாக அமைப்புகள் தொடர்பான அம்சங்கள் திரைமறைவாக அலசப்பட்டிருக்கலாம் என்பதில் மாற்று கருத்திருக்க முடியாது.

மேலும், இந்தியாவின் முன்னெடுப்பில் அமுல்படுத்தப்பட்ட 13வது அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து இந்த சந்திப்பில் விவாதங்கள் இடம்பெற்றிருக்கலாம் என்பதும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. இலங்கை அரசின் நிலைப்பாடுகளை விளக்குவதற்கும், எதிர்கால அரசியல் திட்டங்களுக்கு ஆதாரமான கருத்துகளை முன்வைப்பதற்கும் ரில்வின் சில்வா இந்த சந்திப்பில் முக்கிய பங்கு வகித்திருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது.

இந்த பின்னணியிலேயே ரில்வின் சில்வாவுடன் நடைபெற்ற சந்திப்பில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் தற்போதைய நெருக்கடி நிலைகள் குறித்து விவாதங்கள் இடம்பெற்றதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் கூறினாலும், மாகாண சபைகள் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான விவகாரங்களும் நுணுக்கமாக ஆராயப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

குறிப்பாக அந்த சந்திப்பில் தமிழ் பிரதிநிதிகளும் இடம்பெற்றிருந்தது, தமிழர் அரசியல் தொடர்பான அம்சங்கள் கலந்துரையாடலின் ஒரு பகுதியாக இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகிறது.

இதனுடன் தொடர்பாக, இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் சமீபத்தில் வெளியிட்ட கருத்தில், 2026 ஆம் ஆண்டில் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறாது என்றும், அவை 2027 ஆம் ஆண்டிற்குத் தள்ளிப்போவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், மாகாண சபை அமைப்புகள், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை மற்றும் புதிய பயங்கரவாதத் தடைக் சட்ட திருத்தங்கள் தொடர்பான விடயங்கள் குறித்து ஜெனிவாவில் நடைபெறவுள்ள கூட்டத்தில் விரிவான விளக்கங்கள் வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த இலங்கை வெளிவிவகார அமைஞீன் அறிவிப்பு ரில்வின் குழு ஜெய்சங்கரை சந்தித்த பின் வந்த அறிவிப்பு என்பது ஆழமாக பார்க்க வேண்டியது.

தமிழர் தரப்பை மையமாகக் கொண்டு பூகோள அரசியல் சூழலில் இலங்கையை மையப்படுத்தி தொடர்ந்தும் அரசியலை கையண்டு வந்த இந்தியாவுக்கு, தற்போது மீண்டும் தமிழர்களை அடிப்படையாகக் கொண்டு மாகாண சபை அதிகாரங்களை பரவலாக்கி, வடக்கு-கிழக்கில் தங்களுடைய கட்டுப்பாட்டை நிலைநிறுத்த வேண்டிய தேவை உருவாகியுள்ளது. பூகோள அரசியல் வல்லாதிக்க போட்டியின் காரணமாக இந்தியா விரும்பியோ விரும்பாமலோ இந்த நிலைக்கு வந்துள்ளது.

அதைவிட இந்திய வெறுப்பை கக்கிய அனுர அரசையும் கன கச்சிதமாக கையாள வேண்டிய தேவையும் இருக்கிறது.

ஒவ்வொரு அரசியல் நகர்விற்குப் பின்னரும் புதிய முடிவுகள் உருவாகும் நிலையில், இந்தியா தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என வலியுறுத்தி வந்தாலும், இலங்கை அரசோ மாகாண சபை மீளாய்வு குழுக்கள் அமைத்து காலத்தை நீட்டித்துள்ளன. மறுபுறம் 13வது திருத்தச்சட்டத்தின் முழுமையான அமுலாக்கம் குறித்து தமிழ் தேசிய கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்தியா கொண்டுவந்த 13 ஆவது திருத்தச்சட்டத்தினூடாக "வடக்கு கிழக்கு தமிழர் தாயகம்" என்ற அடிப்படை நாதத்தினையே நீதிமன்ற வழக்குகளின் ஊடாக சென்று வடக்கு-கிழக்கு பிரிப்பு செய்த ஜே.வி.பி. குழு அதுவும் அதன் பொதுச்செயலர் இந்திய தலைநகர் புதுடெல்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்த்திக்கும் அளவிற்கு அரசியல் களம் அதிசமாக மாறியிருக்கிறது.

வடக்கு கிக்கு பிரிப்பின் பின் மாகாண அதிகாரப் பரவலாக்கம் குறைவு, காணி மற்றும் பொலீஸ் அதிகாரங்களின் இல்லாமை போன்ற பிரச்சினைகள் நீடித்து வருகின்ற நிலையில் ரில்வினுடனான இந்திய சந்திப்பு எதிர் இலங்கை அரசியலில் மாற்றம் நிகழ்த்தும் . எதிர்காலத்தில் இந்தியாவின் தலையீடு மற்றும் அரசியல் அழுத்தங்கள் மூலம் முழுமையான 13வது திருத்தச் சட்ட அமலாக்கத்துடன் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுமா? என்பது காத்திருந்து பார்க்க வேண்டிய விடயமாகவே உள்ளது.

அரசியல் சூழல் காலப்போக்கில் வேகமாக மாறிவரும் நிலையில், முன்னர் நீதிமன்ற வழக்குகள் மூலம் வடக்கு-கிழக்கை பிரித்த ஜேவிபி கட்சி தற்போது ஆட்சியில் உள்ளது. அந்த கட்சியினுடைய பொதுச் செயலாளரை இந்தியா அழைத்து பேசுகின்றனர். ஆகவே அரசியல் சூழல் வேகமாக மாறி வருகிறது. சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுடனும் இலங்கை சமநிலையை பேண வேண்டிய அரசியல் தேவையையும் அதை கம்னியூசிய சித்தாந்த வழி வந்த ஜேவிபி சரியான முறையில் தற்போது கையாண்டு வருகிறது.

ஆகவே, டில்வின் சில்வாவினுடைய அரசியல் அணுகுமுறையின் மையத்தில் மாகாண சபைத் தேர்தல்கள் தமிழர்களுக்கு பூரணமான அரசியல் அபிலாசைகளை கொண்டதாக அமையுமா? அது எப்போது அமையும்? என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது.

அதற்கிடையில், வேறொரு தொழில்நுட்ப கருத்தரங்கு தொடர்பாக அநுர அவர்கள் அடுத் மாதங்களில் இந்தியா பயணம் மேற்கொள்ள இருக்கிறார். தொடர்ச்சியாக இலங்கை தலைவர்கள் இந்திய தலைவர்களை நோக்கி ஈர்க்கப்பட்டு கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

இலங்கை அரசியலில் என்ன நடைபெறப்போகிறது என்பதற்கான கேள்விகள் எழுந்துள்ள நிலையில், இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தல் நடைபெற வாய்ப்பில்லை என்பது உறுதியாக தெளிவாகிறது. தமிழர் தரப்பும் உள்வீட்டு அரசியல் பிரச்சனைகளை தாண்டி, உச்சபட்ச அதிகாரங்களை பெறுவதற்காக இந்தியாவையும் உலக வல்லரசுகளையும் நோக்கி அழுத்தம் கொடுக்கும் அரசியல் முயற்சிகள் முன்னெடுக்க உழைக்க வேண்டும் .

இந்த சூழலில் தமிழ் அரசியல் தலைவர்கள் ஒற்றுமையாக செயல்பட்டு, தமிழ் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு அரசியல் நடவடிக்கை எடுக்க செய்ய வேண்டிய காலகட்டமாக இது பார்க்கப்படுகிறது. தற்போதைய நிலவரப்படி, இந்த முறை மாகாண சபைத் தேர்தல் நடைபெறாது என்பது திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மக்கள் நலனை மையப்படுத்தி, இந்தியாவை மேலும் நெருக்கமாக அணுகும் திசையில் தமிழ் தலைமைகள் முன்னேற வேண்டும் என்பதே இன்றைய அரசியல் நிதர்சனமாக உணர்த்துகிறது.



கு.மதுசுதன்
B.Sc(Hons), M.Sc
அரசியல் ஆய்வாளர்




# மீண்டும் இருண்ட யுகத்திற்கு வழிகாட்டும் "திசைகாட்டி"

**"இலங்கையில் மக்கள் போராட்டங்களையும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தையும் சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சியையும் அடக்குவதற்கு, அழிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்தை அதே சட்டத்தால் மோசமாக பாதிக்கப்பட்டவர்களும் அந்த சட்டத்தையும் பயங்கரவாத சட்டத்தையும் ஒழித்தே தீருவோம் என வாக்குறுதியளித்து ஆட்சி பீடம் ஏறியவர்களுமான ஜே .வி.பி.- தேசிய மக்கள் சக்தியினரே மீண்டும் கையில் எடுத்து அமுல்படுத்தியுள்ளமைதான் காலக்கொடுமையானது."**

**------------------------------------------------------------ கே.பாலா -**

1942 இலிருந்து 2022வரையான 80 வருட காலத்தில் அதிகமான காலம் இலங்கை மக்கள் அவசரகால சட்டத்தினதும் பயங்கரவாத தடைச் சட்டத்தினதும் கீழ்தான் அழிக்கப்பட்டார்கள், அடக்கியாளப்பட்டார்கள். இன்றும் பலர் இந்த சட்டங்களின் கீழ்தான் பல வருடங்களாக சிறைகளில் வாடுகின்றனர். இரட்டைப் பிசாசுகளான அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதச் சட்டமும் ஒன்றாகச் செயற்படுத்தப்பட்டால் என்ன நடக்கும் என்பதனை தமிழ் மக்களே முதலில் அனுபவித்தனர். அவ்வாறானதொரு சட்டத்தை அநுரகுமார அரசு மீண்டும் கையில் எடுத்துள்ளமை நாடு மீண்டும் சர்வாதிகார ஆட்சிக்குள் செல்கின்றதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பாக கடந்த வார பாராளுமன்ற அமர்வில் பிரேரணை முன்வைக்கப்பட்டு சூடான விவாதங்கள் இடம்பெற்ற நிலையிலேயே நாடு மீண்டும் இரட்டைப் பிசாசுகளான அவசரகாலச் சட்டம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் என்ற ரீதியில் ஒரு அராஜக நிலைக்கு சென்று விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தி விட்டுள்ளது. அதுவும் நாட்டுக்கு புதிய திசை காட்ட வந்த அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் பழைய திசையில் பயணிக்க முற்படுவதும் கடும் விமர்சனங்களையும் உருவாக்கியுள்ளது. இலங்கையை ஆட்சிபுரிந்த பிரதான சிங்களக் கட்சிகளின் தலைமைகளிலான அரசாங்கங்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் எழுதிய இரத்த வரலாறுகளை சிறுபான்மையின மக்கள் இதுவரை மறக்காததாலேயே மீண்டும் அவசரகாலச் சட்டம் அமுல் என்றவுடன் அச்சத்தின் பிடியில் சிக்குண்டுள்ளனர்.


அவசரகால சட்டம் அமுலான தருணங்கள்

இலங்கையில் முதற் தடவையாக 1942 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி அன்று அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. சுதந்திரமடைவதற்கு முன்னமே அன்றைய காலனித்துவ அரசாங்கத்தின் ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டது இது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜப்பான் இலங்கையைச் சுற்றிவளைக்க முயன்று கொண்டிருந்த காரணத்தைக் காட்டி கட்டாய இராணுவச் சேவைக்காகவே இந்த அவசரகால சட்ட நிலை அன்று பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் 1947 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடந்த தொழிலாளர் வேலை நிறுத்தமும் அதனை தொடர்ந்து நடந்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாகவும் அன்றைய சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கபட்டது. இதனை பயன்படுத்தியே 1953 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடந்த ஹர்த்தால் டட்லி சேனநாயக்க அரசினால் அடக்கப்பட்டது. பண்டாரநாயக்காவின் ஆட்சியின் கீழ், 1958 ஆம் ஆண்டு மே மாதம் இனக்கலவரம் நடந்தது. இந்த இனக்கலவரத்தின் போது நூற்றுக்கணக்கான தமிழர் கொல்லப்பட்டனர். பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர் கொழும்பில் அகதிகளாக்கப்பட்டனர். பல தமிழர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இனக் கலவரம் 27ஆம் திகதியே தொடங்கிய போதும் தமிழர்கள் பாதிப்புக்குள்ளாகிய மூன்றாவது நாளே அதாவது 29ஆம் திகதியே அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. அதாவது அவசரகால சட்டம் அவசியமான நேரத்தில் அமுலாகவில்லை.

1958 ஆம் ஆண்டு மே 27ஆம் திகதி போடப்பட்ட அவசரகாலச் சட்டம் 1959 ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் திகதி வரை அமுலிலிருந்தது. அதன் பின்னர் பண்டாரநாயக்க செப்டெம்பர் 25ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அன்றிலிருந்து டிசெம்பர் 2ஆம் திகதிவரை அவசரகால சட்டம் அமுலில் இருந்தது. மீண்டும் 1961 ஏப்ரல் 14ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழரசு தபால் சேவையை நடத்தியதைத் தொடர்ந்து ஏப்ரல் 17ஆம் திகதி அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. தமிழரசுக் கட்சியும் அன்றே தடை செய்யப்பட்டது. இந்த அவசரகால சட்டம் 1963 ஆம் ஆண்டு மே தினத்தன்று வரை அமுலில் இருந்தது.

டல்லி-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து நாடளாவிய ரீதியில் கொண்டு செல்லப்பட்ட பிரசாரங்கள், ஊர்வலங்கள் காரணமாக 1966 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதுடன் அது டிசம்பர் 17 ஆம் திகதி வரை அமுலில் இருந்தது. பின்னர் மீண்டும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டு அது 1969ஆம் ஆண்டு 17ஆம் திகதி வரை அமுலில் இருந்தது. இக்கால இடைவெளிக்குள் வடக்கு கிழக்குப் பகுதியிலும் மலையகத்திலும் நடந்த தமிழர்களின் போராட்டங்கள் மோசமாக அடக்கப்பட அவசரக-ாலச் சட்டமே பயன்படுத்தப்பட்டது.




1971ஆம் ஆண்டு ஜே.வி.பி கிளர்ச்சியினால் பீதியுற்ற அரசாங்கம், மார்ச் மாதம் 16ஆம் திகதி அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியது. இதன் கீழ் அனுமதியின்றி பிணங்களை எரிக்கும் சட்டத்தையும் கொண்டு வந்தது. இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சியை 20,000க்கும் மேற்பட்டோரைக் கொன்று குவித்து அடக்கியது. அதே அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தியே பல ஆயிரக்கணக்கானோரை சித்திரவதை முகாம்களுக்கும் சிறைக் கூடங்களுக்கும் அனுப்பியது அன்றைய சிறிமாவோ அரசாங்கம்.

1979 ஆம் ஆண்டு பெப்ரவரி 16ஆம் திகதி வரை இந்த அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தது. இக் கால இடைவெளிக்குள் வடக்கில் நடத்தப்பட்ட போராட்டங்களை நசுக்குவதற்கும் இச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. 1977ஆம் ஆண்டு ஜே.ஆர் தலைமையிலான ஐ.தே.க அரசாங்கம் ஆட்சியமைத்தது. 1994 வரையான 17 ஆண்டு கால ஆட்சிக்குள் 11 வருடங்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழேயே ஆட்சி நடத்தியது. வடக்கில் எழுந்த உரிமைப் போராட்டத்தை பயங்கரவாதக் கிளர்ச்சியாகவே பார்த்த ஜே.ஆர் அரசாங்கம் 1979 ஜூன் 11ஆம் திகதி அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தியது. இந்த அவசரகாலச் சட்டத்தை அமுலில் வைத்துக் கொண்டே ஜூலை 12ஆம் திகதி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. 1979 ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் திகதி வரை அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தது.

1980 ஆம் ஆண்டு ஜூலையில் சம்பள உயர்வு கோரி நடந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை நசுக்குவதற்காக ஜூலை 16 ஆம் திகதி போடப்பட்ட அவசரகாலசட்டம் ஒகஸ்ட் 15 ஆம் திகதி வரை நீடித்தது. இதன் இன்னொரு முக்கிய அம்சம் இதே அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 40,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்களில் பெரும்பாலானோர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.

அடுத்ததாக 1981 ஆம் ஆண்டு ஜூன் 2 ஆம் திகதி கொண்டு வரப்பட்ட அவசரகால சட்டம் ஒரு கிழமை நீடித்தது. 1981 ஆம் ஆண்டு மே 24ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்துக்கான மாவட்ட சபைத் தேர்தல் வேட்பாளரான ஐ.தே.க.வைச் சேர்ந்த ஏ.தியாகராஜா இனந்தெரியாத நபர்களால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவசரகாலசட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. மீண்டும் அவசரகாலசட்டம் 1981 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 17ஆம் திகதி போடப்பட்டு 1982 ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் திகதி வரை அமுலில் இருந்தது. அதேவேளை 1982ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் நிரந்தர சட்டமாக்கப்பட்டது.

வரலாற்றில் முக்கியமான அவசரகாலசட்டமாக 1983 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி போடப்பட்டதையே குறிப்பிட வேண்டும். 1983 ஜூலை இனப்படுகொலை கூட இதன் கீழ் தான் நடத்தப்பட்டது. அன்றைய அந்த அவசரகாலச் சட்டம் 1989 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் திகதி வரை அமுலில் இருந்தது. அந்த இடைக் காலத்திற்குள் எவ்வளவோ நடந்து முடிந்திருந்தன.

இந்த அவசரகால சட்டமும் 1989 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் திகதி நீக்கப்பட்டிருக்கையில் ஒன்பதே நாட்களில் அதாவது ஜனவரி 20ஆம் திகதி மீண்டும் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவால் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. அது 1994 செப்டம்பர் வரை அமுலில் இருந்தது. 2009 ஆம் ஆண்டில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை இனப்படுகொலை மூலம் அழித்தொழிக்க இந்த அவசரகாலச்சட்டமே பயன்படுத்தப்பட்டது. இந்த சட்டம் மூலமே பல்லாயிரக்கணக்கான தமிழர்

இனப்படுகொலை செய்யப்பட்டார்கள், கடத்தப்பட்டார்கள், காணாமல் போகச் செய்யப்பட்டார்கள், கைதிகளாக்கப்பட்டார்கள், அகதிகளாக்கப்பட்டார்கள்.

பின்னர் ஜெனிவாவில் இலங்கை அரசாங்கம் உறுதியளித்தப 2011 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 26 ஆம் திகதி அவசரகால சட்டத்தை நீக்கியது. ஆனால் 06.09.2011 வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் அதன் பல அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டன. இந்நிலையில் 2018 ஆம் ஆண்டு மார்ச் ஆரம்பத்தில் திகனவில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான இன வன்முறை வெடித்தபோது மார்ச் 6 ஆம் திகதி அவசரகால சட்டம் கொண்டுவரப்பட்டபோதும் சில தினங்களில் அது நீக்கப்பட்டது.

இதன் பின்னர் 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு தேவாலயங்கள் மற்றும் கொழும்பிலிலுள்ள 5 நட்சத்திர ஹோட்டல்களில் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு 300க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் உயிரிழந்தும் 500க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்ததையடுத்து ஏப்ரல் 22 ஆம்திகதி முதல் மீண்டும் அவசரகாலச் சட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அமுல்படுத்தப்பட்டது.




(தொடர்ச்சி 17 பக்கம்)




## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள்**
**ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**




11/24



# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND
INDUSTRIAL CONSTRUCTION



**OUR SERVICE**

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**
**416-908-5656**



Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

# மலையக மக்களின் வாக்குகளாலும் பதவிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசிடமும் அவர்களின் வியர்வையின் இலாபத்தை அள்ளும் தனியார் நிறுவனங்களிடமும் விடுக்கப்படும் ஒரு கோரிக்கை!

## மலையக சமூக ஆய்வு மையம் விடுத்துள்ள அறிக்கை!

**மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட சம்பளம அதிகரிப்பு கைக்கு கிடைக்கும் முன்பே எத்தகைய பொது அறிவித்தலும் இன்றி ஒவ்வொரு கம்பெனியும் தான்தோன்றித்தனமாக செயற்பட்டு, ஒரு நாள் சம்பளத்திற்கு 26 கிலோ வரை கொழுந்து பறிக்க நிர்ப்பந்திப்பதும், இறப்பர் பால் வெட்டும் தொழிலாளர்கள் 09 கிலோவுக்கும் அதிகமாக பாலை சேகரிக்க வேண்டுமெனவும் கட்டாயப்படுத்தப்படுவதன் நியாயம் என்ன? தேயி கொழுந்தை பொறுத்தவரை ஒவ்வொரு எடையை அளிவிடும்போதும் (கொழுந்து நிறுத்தல்) குறிப்பிட்ட கிலோ கொழுந்து கழிக்கப்படும். இவ்வாறு கழிக்கப்படும் கொழுந்தையும் சேர்த்தால் முப்பத்தைந்து கிலோவுக்கும் அதிக தேயிலை கொழுந்தை பறிக்க வேண்டும். இவ்வாறான வேலை பளுவை அதிகரிப்பதின் பின்னோக்கம் என்ன? எம்மைப் பொறுத்தவரையில் இது தொழில் மீது வெறுப்பை ஏற்படுத்துவதற்கே இத்தகைய செயல்பாடு முன்னெடுக்கப்படுகின்றதா?.**

---



மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு எனும் கவர்ச்சி சொல்லாடலுக்கு பின்னால் சிங்கள பௌத்த பெரும் தேசிய வாதத்தின் இன அழிப்பு அரசியலும் மறைந்திருப்பதாகவே தோன்றுகின்றது. மக்கள் அதிகரித்ததாக எதிர்பார்த்திருக்கும் ரூபாய் நானூறு இலக்கத்தினை பார்த்துக்கொண்டிருக்க அவர்கள் மீது சுமத்தப்படும் தொழில் சுமை மற்றும் நாம் புறந்தள்ளப்படுகின்றோம் எனும் உளவியல் தாக்கம் காரணமாக தொழிலாளர்கள் தொழிலை விட்டும் தொழிலிடத்தை விட்டும் சுயமாகவே தூர விலகிச் செல்வது மேலும் தீவிரமடையலாம். இது இன அழிப்பின் மாற்று வடிவம் என்பதை மலையக சமூக ஆய்வு மையம் தெளிவாக கூறுவதோடு, இத்தகைய வன்கொடுமையை பெருந்தோட்ட நிறுவனங்களும் அரசாங்கமும் உடன் நிறுத்தி மலையக உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கை பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும், மலையக மக்களின் பெரும்பான்மை வாக்குகளாலும் பதவியில் அமர்த்தப்பட்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடமும் இரத்த வியர்வையின் இலாபத்தை அள்ளும் பெருந்தோட்ட நிறுவனங்களிடமும் மலையக சமூக ஆய்வு மையம் கோரிக்கை விடுக்கின்றது.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் தொழிலாளர்களுக்கான நாள் சம்பளம் மற்றும் வருகைக்கான கொடுப்பனவு உட்பட ரூபாய் 1750 /= யாக அதிகரிக்கப்படும் எனும் செய்தி கேட்ட உடனேயே மலையக பெருந்தோட்ட மக்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்ந்ததோடு ஜனாதிபதிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் ஆசி வேண்டி பூசை வழிபாட்டிலும் ஈடுபட்டனர். மகிழ்ச்சியின் உச்சக்கட்டமாக ஜனாதிபதியின் உருவப்படுத்தின் முன்னாள் விழுந்து வணங்கியதையும் காணக்கூடியதாக இருந்தது. இத்தோடு மாத்திரம் நின்றுவிடாது எதிர்க்கட்சிகள் மீது வசைப்பாடி அவர்களுக்கு எதிராக போராட்டம் நடத்தியதையும் நாம் அறிவோம். இத்தகைய கள சூழ்நிலையையே தேசிய மக்கள் சக்தி மலையகத்தில் விரும்பியது.

ஆனால் அறிவிக்கப்பட்ட சம்பளம் கைக்கு கிடைக்கும் முன்பே எத்தகைய பொது அறிவித்தலும் இன்றி ஒவ்வொரு கம்பெனியும் தான்தோன்றித்தனமாக செயற்பட்டு, ஒரு நாள் சம்பளத்திற்கு 26 கிலோ வரை கொழுந்து பறிக்க நிர்ப்பந்திப்பதும், இறப்பர் பால் வெட்டும் தொழிலாளர்கள் 09 கிலோவுக்கும் அதிகமாக பாலை சேகரிக்க வேண்டுமெனவும் கட்டாயப்படுத்தப் படுவதன் நியாயம் என்ன? தேயி கொழுந்தை பொறுத்தவரை ஒவ்வொரு எடையை அளிவிடும்போதும் (கொழுந்து நிறுத்தல்) குறிப்பிட்ட கிலோ கொழுந்து கழிக்கப்படும். இவ்வாறு கழிக்கப்படும் கொழுந்தையும் சேர்த்தால் முப்பத்தைந்து கிலோவுக்கும் அதிக தேயிலை கொழுந்தை பறிக்க வேண்டும். இவ்வாறான வேலை பளுவை அதிகரிப்பதின் பின்னோக்கம் என்ன? எம்மைப் பொறுத்தவரையில் இது தொழில் மீது வெறுப்பை ஏற்படுத்துவதற்கே இத்தகைய செயல்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.



மேலும் டித்வா புயலைத் தொடர்ந்து மலையக மக்களின் வாழ்க்கை நிச்சயமற்ற சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், சம்பளத்தை முழுமையாக பெற்றுக்கொள்வது என்பது குதிரை கொம்பாகவே இருக்கப் போகின்றது. இது அவர்களின் அன்றாட வாழ்வில் பல பக்கங்களிலும் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும். இது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று அல்ல.

கடந்த வெள்ளிக்கிழமை (2026.02.06) கண்டிக்கு சென்ற ஜனாதிபதி அண்மைய சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட 150 பயனாளிகளுக்கு இழப்பீடுகளை வழங்கியுள்ளார். அரசாங்கத்தின் 8/ 2025 இன் தொடர் இலக்கம் 8க்கு ஏற்ப மதிப்பீட்டு குழுவின் அறிக்கை அமைய 25 இலட்ச ரூபாயை பயனாளிகளுக்கு கொடுக்க முடியும். பயனாளிகள் விரும்பினால் மதிப்பீட்டு அறிக்கை இன்றி 5 இலட்சம் ரூபாயை பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு கொடுத்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகினள. அத்தோடு டித்வா காரணமாக சேதமடைந்த வார்த்தக நிலையங்கள் மற்றும் இயந்திரங்களின் சேதத்தில் இருந்து மீண்டு தொழிலை தொடங்குவதற்கு ரூபாய் இரண்டு இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்கதே.

இப்பயனாளிகளில் மலையக உழைக்கும் மக்கள் உள்வாக்கப்பட்டார்களா அல்லது மலையக மக்களை அடையாளப்படுத்தி இழப்புகளை கொடுப்பதற்கு ஜனாதிபதி மலையகம் நோக்கி செல்லும் நாள் எப்போது? என்பதே மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வி.

அதே நேரம் பாதிக்கப்பட்டவர்களை பாதிப்பிற்குள்ளான இடங்களிலேயே மீண்டும் சென்று குடியேர வேண்டும் என தோட்ட நிர்வாகிகளும் அரசு அதிகாரிகளும் கட்டாயப்படுத்துவதாகவும் கூறப்படுகின்றது. இது உழைக்கும் மக்களை கொலை களத்திற்கு தள்ளுவதற்கு சமமான செயலாகும். இவ்வாறான சம்பவங்கள் நடைபெறும் இடங்களை அடையாளம் கண்டு தடுத்து நிறுத்த ஜனாதிபதி உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நீதி அனைவருக்கும் சமம். மலையக மக்களும் இந்நாட்டு குடிமக்களாக சமத்துவத்தோடு உள்வாங்கப்படும்போதே நாடு சுபீட்சம் காணும். முழுமையாக சுதந்திரத்தை முழு நாடும் அனுபவிக்கும்.

வளமான நாட்டை உருவாக்க அதனை பாதுகாக்க 200 வருடங்களாக உழைக்கும் மலையக சமூகம், வறுமைக்குள் வாழ்வதும், அவர்களுக்கு நீதி கிட்டாதிருப்பதும் திட்டமிட்ட இனவழிப்பாகும். அதுவும் இயற்கை தாக்கத்தினால் முழு நாடும் பாதிக்கப்பட்டிருக்கையில் ஒரு சமூகத்தை அந்த பாதிப்பிலிருந்து மீட்டெடுப்பதற்கான வேலைத் திட்டத்தை முன்னேற்றகரமாக முன்னெடுத்துக்கொண்டு, இன்னும் ஒரு சமூகத்தை கட்டமைப்பு ரீதியில் ஒதுக்கப்பட்டு அவர்கள் வாழ்வினை செயலிழக்கும் நிலைக்கு தள்ளுவது சமயங்களில் தர்ம கோட்பாட்டிற்கு துரோகமான செயல் மட்டுமல்ல, அடிப்படை மனித உரிமைகளை மீறும் சர்வதேச குற்றமுமாகும்.

எனவே டித்வா புயல் ஏற்பட்டு இரண்டு மாதங்களை கடந்துள்ள நிலையில் இரு நூற்றாண்டுகள் நாட்டுக்காக உழைத்து வறுமையாக்கப்பட்டு வாழ்வு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மலையக மக்களை விசேட தேவையுடைய சமூகமாக கருதி நிவாரணங்களை வழங்க ஜனாதிபதி துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் மலையக மக்கள் தம் தேசிய அடையாளத்தோடு பாதுகாப்பான வாழ்வை வடிவமைத்து பொருளாதார ரீதியில் தம்மை பலப்படுத்தும் வகையில் அவர்களுக்கான காணி உரிமையை வழங்குவதற்கான வேலை திட்டத்தை முன்னெடுக்க அதிகாரிகளை பணிக்குமாறும் மலையக சமூக ஆய்வு மையம் ஜனாதிபதியை கேட்டுக்கொள்கின்றது.



---



கனடிய செய்திகள்
Canadian News

# REMAX Community Realty Inc, hosted it's Annual Winter Gala and honored many Successful Agents.



## நன்கு அறியப்பெற்ற வீடு விற்பனை முகவர் ரஜீவ் கோணேஸ் நிர்வாகத்தில் இயங்கும் REMAX Community Realty Inc நடத்திய குளிர்கால விருது வழங்கும் விழா!

கனடாவில் நன்கு அறியப்பெற்ற வீடு விற்பனை முகவர் நிறுவனத்தை தலைமை தாங்கி நடத்தி வரும் முகவர் ரஜீவ் கோணேஸ் அவர்களின் நிர்வாகத்தில் இயங்கும் REMAX Community Realty Inc தனது வருடாந்த குளிர்கால விருது வழங்கும் விழாவை கடந்த 07-02-2026 சனிக்கிழமையன்று ஸ்காபுறோ கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி விருதுகள் வழங்கும் விழாவை சிறப்பாக நடத்த ரஜீவ் கோணேஸ் அவர்களின் குடும்பத்தினர் - அவரது சகோதர சகோதரி மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.




















பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சரான ஹரி ஆனந்தசங்கரி, பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் மற்றும் நகரசபை உறுப்பினர் நீதன் சண்முகராஜா ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துரைகளையும் வழங்கி பின்னர் விருதுகளைப் பெற்ற வீடு விற்பனை முகவர்களுக்கும் விருதுகளை வழங்கினர்.

அத்துடன் அன்றைய நிகழ்வில் ஸ்காபுறோவில் அமையப் போகின்ற "தமிழர் சமூக மையத்தின்" நிதிக்காக REMAX Community Realty Inc நிறுவனத்தின் தலைவர் மற்றும் வீடு விறபனை முகவர்கள் இணைந்து வழங்கிய 5 லட்சம் டாலர்கள் தமிழர் சமூக மையத்தின் சார்பில் அங்கு கலந்து கொண்ட சாந்தா பஞ்சலிங்கம் அவர்களிடம் கையளிக்கப்பெற்றது. நூற்றுக்கும் அதிக மான வீடு விற்பனை முகவர்கள் தங்கள் விற்பனைத் திறனுக்கு ஏற்ப தங்கள் விருதுகளைப் பெற்று மகிழ்ந்தனர்.!

***- Uthayan LJI Journalist Arjune -***




Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

(1 பக்கம் தொடர்ச்சி)

## மீண்டும் இருண்ட யுகத்திற்கு வழிகாட்டும் "திசைகாட்டி"

பின்னர் நீக்கப்பட்டநிலையில் பாவனையாளர்களுக்கும் மக்களின் நலனுக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தும் சந்தை முறைகேடுகளை ஏற்படுத்தும் வகையில், அரிசி, சீனி உள்ளிட்ட உணவுத் தொகைகளைப் பதுக்கியும் விநியோகத்தை தடுத்தும், மிகக் கூடுதலான விலையை அறவிடுவதைத் தடுப்பதற்கெனக்கூறி மீண்டும் 2021 ஆம் ஆண்டு கோத்தபாய ராஜபக்ச அரசினால் கொண்டுவரப்பட்டது. அதன்பின்னர் நீக்கப்பட்டு மீண்டும் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது ஏற்பட்ட போராட்டங்களை கட்டுப்படுத்துவதற்காக 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் திகதி அப்போதைய பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் கொண்டுவரப்பட்டது.

இவ்வாறாக இரட்டைப் பிசாசுகள் அல்லது இரட்டைக் குழல் துப்பாக்கி எனக்கூறப்படும் பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகால சட்டத்தை அமுல்படுத்தாது நாட்டை ஆட்சி செய்த ஒரு அரசாங்கம் கூட இலங்கையில் இருந்தது கிடையாது. ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமும் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி அரசாங்கமும் பொதுஜன பெரமுன அரசாங்கமும் இச்சட்டத்தின் கீழேயே மாறி, மாறி நாட்டில் ஆட்சிஅதிகாரம் புரிந்து வந்துள்ள நிலையில் இப்போது அதே வழியில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.-தேசியமக்கள் சக்தி அரசாங்கமும் இலங்கையில் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது.

நாட்டில் ஒரு நெருக்கடி நிலை ஏற்பட்டால் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒரு அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் நாடு முழுவதிலுமோ அல்லது குறிப்பிட்ட பிரதேசத்திலோ அவசரகாலச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்க முடியும். அப்படியான ஜனாதிபதியின் அறிவித்தல் 30 நாட்களுக்கு செல்லுபடியாகும். அதனை பாராளுமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றவும் வேண்டும். அதன் பின்னர் இந்த அவசர கால சட்டத்தை கால நீடிப்பு செய்ய பாராளுமன்றத்தில் மாதம் ஒரு தடவை ஒப்புதல் பெறவேண்டும். அந்த வகையில் இந்த அவசர கால சட்டத்தை தற்போது ஜனாதிபதி அநுரகுமாரவும் கடந்த நவம்பர் 26 இல் நாட்டில் ஏற்பட்ட டித்வா புயல் பேரழிவை பயன்படுத்தி அமுல்படுத்தியதுடன் தற்போது மாதத்திற்கொருதடவை நீடிக்கவும் செய்கின்றார். இதுதான் பல்வேறு கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் உத்தரவுக்கமைய ஜனாதிபதி செயலாளர் கலாநிதி என்.எஸ். குமாரநாயக்கவின் கையொப்பத்துடன் ஜனவரி 28ஆம் திகதி இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. இலங்கையில் நிலவும் பொது அவசரகால நிலைமையைக் கருத்திற்கொண்டு, பொதுப் பாதுகாப்பு மற்றும் நாட்டின் இயல்பு நிலையைப் பாதுகாத்தல் மற்றும் பொதுமக்களின் வாழ்க்கைக்கு அவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பேணுவதற்காக இந்த பொது அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த வர்த்மானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டது.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் விளக்கமளித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இந்த அனர்த்த நிலைமையின் போது பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்திற்கமைய அவசரகால சட்டத்தையும் அமுல்படுத்தினோம். இவ்வாறான அனர்த்தங்களின் போது சாதாரண சட்டங்களை விடவும் இதுபோன்ற சட்டம் அவசியம். இதன்மூலமே அதிகாரிகள், உபகரணங்களை வேறு மாவட்டங்களுக்கு அனுப்ப முடியும். இந்த நேரத்தில் மிகவும் பொருத்தமான சட்டத்தை ஆராய்ந்தே இந்த முடிவை எடுத்தோம். இந்த மக்கள் பாதுகாப்பு சட்டத்தை மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் வகையில் பயன்படுத்துவதற்கு எவ்விதத்திலும் இடமளிக்கப்படாது. எம்மீதான விமர்சனங்கள் தொடர்பில் எவ்வித பிரச்சினையும் கிடையாது. நாங்கள் ஒருபோதும் இந்த சட்டத்தை மக்களை அச்சுறுத்துவதற்காக பயன்படுத்தப் போவதில்லை என உறுதியளித்தார்.

ஆனால் அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அனர்த்த நிலைமையை அறிவித்திருந்தால், அந்தச் சட்டத்தின் 10, 11 மற்றும் 12ஆவது பிரிவுகளின் கீழ் தேவையானவற்றைச் செய்திருக்க முடியும். ஏனெனில் இது ஒரு அவசர நிலைமை. குறிப்பாக ஒரு அவசரகால நிலைமையை அறிவிக்கும்போது, இந்த விதிகளைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காகவே அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அனர்த்த நிலையை அறிவித்துத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறாக அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் கீழ் அனர்த்த நிலைமையை அறிவித்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகைகள் இருக்கத்தக்கதாக, அவசரகால சட்டத்தை அமுல்படுத்துவது பல்வேறு அடக்குமுறைகள் இடம் பெற வாய்ப்பளிக்கும் என்பதே எதிர்க்கட்சிகள், மனித உரிமை அமைப்புகள்,சிவில் சமூக அமைப்புக்களின் குற்றச் சாட்டாகவும் எச்சரிக்கையாகவும் உள்ளது.

இலங்கையில் வர்க்க அடிப்படையில் முன்வைக்கப்பட்ட தொழிலாளர்கள், விவசாயிகள், மற்றும் உழைக்கும் மக்களின் போராட்டங்களையும் தமிழர்களின் உரிமைப்போராட்டத்தையும் சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சியையும் முறியடித்து, அடக்குவதற்கு, அழிப்பதற்கு ஒவ்வொரு ஆட்சியாளர்களும் அவசரகாலச் சட்டத்தையே பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். இச்சட்டத்தின் கீழேயே கொடிய அடக்குமுறைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் இரத்த ஆறுகளும் இலங்கையில் ஓடியிருக்கின்றன. தெற்கிலே, வடக்கு, கிழக்கிலே இலட்சத்துக்கு மேற்பட்ட உயிர்ப் பலிகள் எடுக்கப்பட்டன. இருண்ட ஆட்சியையே அரசுகள் நடத்தின. இவ்வாறான கொடூர அவசரகாலச் சட்டத்தையே தற்போது அதே சட்டத்தால் மோசமாக பாதிக்கப்பட்டவர்களும் அந்த சட்டத்தையும் பயங்கரவாத சட்டத்தையும் ஒழித்தே தீருவோம் என வாக்குறுதியளித்து ஆட்சி பீடம் ஏறியவர்களுமான ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தியினரே மீண்டும் கையில் எடுத்து அமுல் படுத்தியுள்ளமைதான் காலக்கொடுமையானது.

பல தசாப்தங்களாக தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, ஒழிக்க. சிங்கள இளைஞர்களின் புரட்சியை முறியடிக்க இலங்கையை ஆட்சி புரிந்த சகல அரசுகளினாலும் பயன்படுத்தப்பட்ட இந்த அவசர காலச்சட்டத்தை அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் மீண்டும் கையில் எடுத்துள்ளது. தற்போது பாராளுமன்றத்தில் 159 பெரும்பான்மை உறுப்பினர்கள் என்ற மமதையில் சர்வாதிகாரப்போக்குடன் ஆட்சிபுரிய இந்த அரசாங்கம் எத்தனிக்கும் நிலையில் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டுள்ள நிலையில் அதனை பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் என்ற புதிய பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளதுடன் டித்வா புயல் பேரழிவை சாட்டாக வைத்து அவசரகால சட்டத்தையும் அமுல்படுத்தத் தொடங்கியுள்ளமையால் இலங்கை மீண்டும் ஒரு இருண்ட யுகத்திற்குள் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

---

## குடும்ப தினம்

குடும்பம் என்பது கோவில் போன்றது
குடும்பத் தலைவி ஒளிவீடும் விளக்கு
கடமை தவறாக் கணவன் பூசாரி
குழந்தைகள் உணர்வுள்ள வழிபடும் விக்கிரகம்

பேரன் பேர்த்திகள் வழிபடும் பக்தர்கள்
பேரப் பிள்ளைகள் கோவில் மணிகள்
தாரமாய் மகனால் தத்தெடுத்த காரிகை
தமது பொறுப்பை செவ்வனே செய்வரே!

ஓடியோடி ஓய்விலா உழைத்துக் களைத்தவர்
ஓரிரு நாட்கள் ஓய்ந்திட இயலோர்
கூடிக் களித்துக் கொண்டாட முடியாதார்
குடும்பமாய்த் தங்கி இருக்க வாய்ப்பற்றோர்

உண்ண நேரமும் உறங்கவும் வழியற்றோர்
உற்ற துணையுடன் உறவாட நேரமற்றோர்
வண்ணமாய் வாழ்த்துக் கூறியே கொண்டாடி
வாஞ்சை செலுத்தும் உன்னதத் திருநாளே!

வாங்கிய வீட்டில் வசிக்க நேரமின்றி
வசதியாய்க் கட்டிலில் படுக்க முடியாதோர்
தாங்கிய வீடுவிட்டுத் தனிவீடு சென்றோர்
தொழில் நாடித் தொலைநகர் ஏகினோர்

முதுமை காரணமாய் மூத்தோரகம் அடைந்தோர்
மாமன் மாமிகள் பேரன் பேர்த்திகள்
மதுவும் மாமிசமும் பரிமாறி உண்டே
மகிழ்வுடன் கொண்டாடும் தினமே இந்நாளே!

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*


**HELP WANTED**

**Workers needed for renovation company. Must have experience in one of the following:**

- Drywall Installation
- Hardwood Installation
- Kitchen Reno
- Painting
- Bathroom Reno

Call - Siva 416-706-8160

**Sapphire Banquet & Catering**

**Specializing in Videography & Photography**

- Anniversary Party
- Birthdays
- Graduation Party
- Bridal Shower
- Engagement
- Wedding Showers

SHIVA SUBRAMANIAM (647) 406-4868

உலக செய்திகள்
World News

# தமிழ் ஹைக்கூ: ஐந்தாவது உலக மாநாடு இவ்வாண்டு மே 17 அன்று புதுக்கோட்டையில் நடைபெறுகிறது



புதுக்கோட்டைத் தமிழ்ச் சங்கம், “இனிய நந்தவனம்” இதழ், தமிழ் ஹைக்கூ கவிதையாளர்கள் இயக்கம் ஆகியவை இணைந்து நடத்தும் “தமிழ் ஹைக்கூ: ஐந்தாவது உலக மாநாடு - 2026” வரும் மே 17 அன்று புதுக்கோட்டையில் நடத்துவதாக திருக்கோகர்ணம் ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிகுலேசன் மேனிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டத்தில் முடிவெடுக்கபபெற்றது.

இக்கூட்டத்திற்குத் புதுக்கோட்டைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் கவிஞர் தங்கம்மூர்த்தி தலைமையேற்றார். கவிஞர் நந்தவனம் சந்திரசேகரன் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

தலைமையேற்ற கவிஞர் தங்கம் மூர்த்தி அவர்கள் பேசுகையில், “2022-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் திருச்சியில் “தமிழ் ஹைக்கூ: முதலாவது உலக மாநாடு” நடைபெற்றது. பிறகு, அந்தமான், மதுரை, இலங்கை ஆகிய நாடுகளில் அடுத்தடுத்த மாநாடுகள் நடைபெற்றன. இந்த நான்கு மாநாடுகளிலும் கலந்துகொண்ட போது, ஹைக்கூ எனும் மூன்று வரிகள் கொண்ட ஜப்பானிய ஹைக்கூ கவிதைக்கு இப்படியொரு வரவேற்பா என வியந்துபோனேன்.

இன்றைக்கு உலகமெங்கும் இருக்கும் தமிழர்கள் பலரும் ஆர்வத்துடன் ஹைக்கூ கவிதைகளை எழுதுகிறார்கள். அவர்களுக்கு ஹைக்கூ பற்றிய தேடலத் தூண்டும் வகையில் நடத்தப்பெறும் இந்த மாநாட்டில் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, குவைத், துபாய் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த ஹைக்கூ கவிஞர்கள் பங்கேற்கிறார்கள்.

புதுக்கோட்டை சத்தியமூர்த்தி நகரிலுள்ள மகாராஜ் மகாலில் வரும் மே 17-ஆம் தேதி நடைபெறவுள்ள ஐந்தாவது உலக மாநாட்டில் கவியரங்கம், கருத்தரங்கம், நூல் வெளியீடு, ஹைக்கூ கவிதைக் கண்காட்சி ஆகியன இடம்பெறவுள்ளன” என்றார்.

ஹைக்கூ மாநாட்டுக் வரவேற்புக் குழுவைக் கவிஞர் மு.முருகேஷ் முன்மொழிந்து பேசினார். மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவராக கவிஞர் தங்கம்மூர்த்தி, செயலாளராக கவிஞர் மகா. சுந்தர், பொருளாளராக சு.பீர்முகம்மது ஆகியோர் ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர்.




இக்கூட்டத்தில் பேராசிரியர்கள் சா.விஸ்வநாதன், கணேசன், கவிஞர்கள் வம்பனார் அன்பழகன், முருகபாரதி, காசாவயல் கண்ணன், மலையப்பன், அரசு வழக்கறிஞர் மு.செந்தில்குமார், உதயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிறைவாக, கவிஞர் மகா.சுந்தர் நன்றி கூறினார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பொலிசார் மேற்கொண்ட முதல் துப்பாக்கிச் சூட்டிலேயே எனது மகன் மயங்கினார் — என அல்லைப்பிட்டியில் பலியான சிறுவனின் தாயார் தகவல்!



முதல் சூட்டிலேயே தனது மகன் மயங்கியதாகவும், வாகனத்தை நிறுத்திய பின்னரே துப்பாக்கி சூடு மேற்கொண்டதாக, அல்லைப்பிட்டி பகுதியில் வைத்து பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சிறுவன் அ.அருள்பாயஸ்ஸின் தாயார் தெரிவித்துள்ளார்.

11ம் திகதி வியாழக்கிழமை அன்று இடம்பெற்ற இறுதிச் சடங்கின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது மகனுக்கும் வெள்ளை மோட்டார் சைக்கிளில் நின்ற பொலிஸாருக்குமிடையே தான் பிரச்சினை ஏற்பட்டது. அவர்களுடன் பிரச்சினைபட்டுவிட்டு சென்றவேளை ஜீப்பில் வந்த பொலிஸாராலேயே துப்பாக்கி சூடு நடாத்தப்பட்டது. ஜீப்பில் வந்த பொலிஸாருக்கும் எனக்குமிடையே எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. வாகனத்தை நிறுத்திய பின்னரே துப்பாக்கி சூடு நடாத்தப்பட்டது. அந்த பொலிஸார் எனது மகனிடம் அவர்கள் கொத்து, சிகரெட் ஆகியன வழமையாக வாங்கி சாப்பிடுகின்றவர்களாம்.

இன்று எமது வீட்டுக்கு வந்த பொலிசார் போராட்டம் செய்ய வேண்டாம் என்று மறித்தனர். பொலிஸார் காட்டிய இடத்திலேயே புதைகுழி வெட்டி, எனது மகனின் சடலத்தை புதைத்துள்ளோம். அந்த இடத்தில் கிடங்கு வெட்டியவேளை தண்ணீர் வந்தது. அந்த இடத்திலேயே புதைத்துள்ளோம்.

எனது மகன் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டது 1.30க்கு என்று செல்லப்படுகிறது. ஆனால் 5.30 மணிக்கே அவரது சடலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. ஒருடத்தில் வைத்து துப்பாக்கி சூடு நடாத்தப்பட்டது, ஆனால் வேறொரு இடத்திற்கு சடலம் இழுத்து செல்லப்பட்டு போடப்பட்டது.

எனது மகனோடு சென்ற இருவர் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களை சித்திரவதை செய்துள்ளார்கள். அவர்களின் உடற்பகுதியில் அடி காயங்கள் உள்ளன. கஞ்சா வழக்கு மற்றும் வேறு வழக்குகள் அவர்கள் மீது பதிவு செய்யப்போவதாக மிரட்டினார்களாம்.

முதல் சூட்டிலேயே அவர் மயங்கியதாக கூட இருந்தவர்கள் கூறுகின்றார்கள். அதன்பின்னரே ஏனைய துப்பாக்கி சூடுகள் இடம்பெற்றுள்ளன. இது திட்டமிட்ட ஒரு கொலை. எனவே இதற்கு ஒரு சரியான முடிவெடுத்து, எனது பிள்ளையை கொலை செய்தவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றார்.




# குப்பை போடுபவர்களுக்கு எதிராக நல்லூர் பிரதேச சபை மேற்கொண்ட செயற்பாடு வெற்றி!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் பொது இடங்களில் கழிவுகள் கொட்டப்படுவதனை தடுக்கும் முகமாக முதற்கட்டமாக அதிகளவில் கழிவுகள் கொட்டப்படுகின்ற 11 பொது இடங்களை அடையாளப்படுத்தி அங்கு கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு கழிவு கொட்டுபவர்கள் அடையாளப்படுத்தி அபராதம் அறவிடப்படும் பணிகள் நல்லூர் பிரதேச சபையினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் மூலம் நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் பொது இடங்களில் கழிவுகளைக் போடுகின்ற செயற்பாடுகள் வெகுவாகக் குறைந்துள்ளதாக கூறப்படுகிறது.

குறித்த ஏற்றமிகு செயற்பாட்டினை முன்னகர்த்துவதற்கு ஏற்றவகையில் பொது இடங்களில் கழிவுகளை போடுபவர்களை அடையாளம் காணப்பதற்கு நல்லூர் பிரதேச சபைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்ற நல்லூர் பிரதேச செயலகம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், இலங்கை மின்சார சபை, மற்றும் கிராம சேவையாளர்கள் அனைவருக்கும் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரன் நன்றிகளை தெரிவித்தார்.

கடந்த ஐந்து மாத காலத்தினுள் நான்கு லட்சத்து இருபது ஆயிரத்திற்கு ரூபாவுக்கு மேல் தண்டப்பணம் நல்லூப் பிரதேச சபைக்கு வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளது. அத்துடன் குப்பைகளை கண்ட கண்ட இடங்களில் கொட்டும் பழக்கமும் குறைந்துள்ளது

இவ்வாறு கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு அபராதம் விதிக்கின்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் பொது இடங்களில் சிலர் கழிவுகள் வீசுகின்ற செயற்பாடுகளை நிறுத்தவில்லை. எனவே காலத்தின் தேவை கருதி இச் செயற்பாட்டினை முற்றாக நிறுத்துவதற்குரிய கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டும் குற்றச்செயல்கள் ஏற்படுவதனை குறைக்கும் முகமாகவும் மேலும் பல காண்காணிப்பு கமராக்களினை பொருத்தும் நடவடிக்கையினை நல்லூர் பிரதேச சபை மேற்கொள்ளவுள்ளது.

எனவே பொறுப்புணர்வுடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன். மாறாக தங்களுடைய பொறுப்புணர்வினை உதாசீனம் செய்து பொது இடங்களில் குப்பைகளைப் போடுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அவர்களது சட்டவிரோத செயற்பாடு எமது உத்தியோகபூர்வ சமூக வலைத்தளத்தில் பதிவேற்றப்படும் என்பதனையும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன் என நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

# அல்லைப்பிட்டியில் பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சிறுவன் அ.அருள்பாயஸ்ஸின் இறுதிச் ஊர்வலத்தில் மண்ணை அள்ளி பொலிஸார் மீது தூவித் திட்டிய உறவினர்கள்!



அ.அருள்பாயஸ்ஸின் இறுதி ஊர்வலத்தில் கலந்து சிலர் வீதியில் நின்ற பொலிஸாரை நோக்கி மண்ணை அள்ளி வாரி இறைத்து திட்டித் தீர்த்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. அல்லைப்பிட்டி பகுதியில் வைத்து பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சிறுவன் அ.அருள்பாயஸ்ஸின் இறுதிச் சடங்கு 12ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் வட்டுக்கோட்டை - சித்தங்கேணி பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

பின்னர் இறுதி ஊர்வலம் இடம்பெற்றவேளை மாவடி சந்தியில் பொலிஸாருக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் இடையே முறுகல் ஏற்பட்டது. பின்னர் ஊர்வலம் சக்கரத்தை சந்தியை அடைந்ததும் அங்கிருந்த பொலிஸாருக்கும், ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் இடையே மீண்டும் முறுகல் ஏற்பட்டது.

இதன்போது அதில் இருந்த சிலர் வீதியில் இருந்த மண்ணை அள்ளி பொலிஸாரை திட்டி தீர்த்தவாறு, அவர்களுக்கு முன் வீசி எறிந்த சம்பவம் இடம்பெற்றது. அதன்பின்னர் ஊர்வலம் மயானத்தை நோக்கி நகர்ந்தது.

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்
**1183**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## கருமாரி அம்மன் ஆலயம்
### புத்தளம்

ஆதியிலே திராவிட இனத்தவர்கள் அம்மை வழிபாட்டுக்காரராக இருந்தனர் என அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். அம்மை வழிபாடு என்ற பதமே மக்கள் வாய்மொழியில் அம்மன் வழிபாடென மருவிற்று. மானிட பண்பாட்டு வளர்ச்சியின் ஒரு காலப்பகுதியில், பெண்களே முதன்மை பெற்றவராக விளங்கியுள்ளனர். இக்காரணத்தினால் அக்காலப்பகுதியில் பெண்தெய்வ வழிபாடும் முதன்மை பெற்றுக் காணப்பட்டுள்ளது. இவ்வாறான நிலை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலே காணப்பட்டிருக்க வேண்டும்.

இந்தியாவின் வடமேற்கிலே சுமார் 4500 வருடங்களுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் இந்துநாகரிகம், திராவிடருடைய நாகரிகம் என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்நாகரிகத்திலே அம்மை வழிபாடு காணப்பட்டமைக்கான சான்றுகள் உண்டு. பழமையான சிந்துவெளி நாகரிகத்திற்கு முற்பட்ட கிராமிய நாகரிகங்களிலேயும் அம்மை வழிபாடு நிலவியுள்ளது.

சக்தியை பல்வேறு நிலையிலே வழிபடும் வழக்கம் இந்துக்களிடையே காணப்படுகின்றது. இவற்றுள் மாரியம்மன் வழிபாடு மிகத் தொன்மை மிக்கது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மாரியம்மனுக்குத் தனிக்கோயில்கள் காணப்படுகின்றன. மாரியம்மனை பல்வேறு திரு. நாமங்களுடன் கோயில்களிலே எழுந்தருளச் செய்துள்ளார்கள். மகாமாரி, கருமாரி, எல்லையம்மன், செல்லிஅம்மன், அங்காளம்மன், சீதளாதேவி, இரேணுகாதேவி, போன்ற திருநாமங்கள் அனைத்தும் மாரியம்மன் அம்சமாகவே போற்றப்படுகின்றது.

கிராமிய வழிபாட்டின் ஒரு நிலையாகக் கருதப்படுவதோடு சிறுதெய்வ வழிபாட்டின்பாற்படும் மாரியம்மன் வழிபாடு, கிராமிய மக்களிடையே தோன்றிய அச்சத்தின் வெளிப்பாடு என்பது ஆய்வாளர் கருத்து. சிலப்பதிகாரத்திலே இடம்பெற்ற கண்ணகி வழிபாடே மழைதரும் தெய்வம் என்ற பொருளில், மாரிஅம்மன் வழிபாடாக உருப்பெற்றது என்ற கருத்தும் நிலவுகின்றது.

மாரிஅம்மனுக்குப் பெருங்கோயில்கள் அமையாது சிறுகோயில்களில் வழிபாடு நடைபெற்றுவந்த காலத்தில், மாரி அம்மனுக்குத் தனிக்கோயில் அமைக்க வழிகாட்டியவர்களாக சோழமன்னர்கள் விளங்கியுள்ளனர். தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பிற்காலச் சோழ மரபினரே மாரியம்மனுக்குத் தனிக் கோயில்கள் எடுத்துள்ளனர். கோயில்பெயரும், ஊர்பெயரும் ஒன்றாகக்கொண்ட மாரியம்மன் கோயில் என்ற ஊர், தஞ்சாவூருக்குக் கிழக்கே காணப்படுகின்றது. இங்குள்ள ஆலயம் கி.பி 10 ஆம் நூற்றாண்டில் தோன்றியதென்பர்.

அம்மை வழிபாடு உயரியமட்டத்தில் ஆகம வழிபாடு சார்ந்ததாக விளங்குகின்றது. இவ்வழிபாட்டில் ஸ்ரீசக்கரபூசை முதலிடம் பெறும். அம்பிகையை நவசக்திகளாகப் பாவனைபண்ணி இடம்பெறும் நவசக்தி வழிபாடு, சக்திவழிபாட்டின் முக்கிய அம்சமாகும். ஆகமமுறைகளை அநுசரியாது கிராமிய மட்டத்தில் நாட்டார் வழிபாடாகவும் அம்பிகையை வழிபடும்மரபு காணப்படுகின்றது. இவ்வழிபாட்டில் இடம்பெறும் தெய்வ வழிபாட்டில், மாரியம்மன் வழிபாடு குறிப்பிடத்தக்கதாகும். கிராமிய வழிபாட்டில் ஆத்மார்த்தமான ஒரு நிலையை, வெளிப்பாட்டினை உணரமுடியும். உண்மையோடு வழிபடும் அடியவர்களில் அம்மை வெளிப்பட்டு வழிகாட்டும் என்பதில், நிலையான நம்பிக்கையை கிராமிய வழிபாட்டிலே காணமுடியும்.

இவ்வாறு அம்பிகை வெளிப்பட்டு நிற்கும் அடியார்கள் கூறும் வாக்கினை, அருள் வாக்காகக் கொண்டு அதனைச் செயற்படுத்தும் மனநிலையை, கிராமிய வழிபாடு மக்களுக்கு அளித்துள்ளது. இந்தியாவிலும், இலங்கையிலும் மிகச் சிலவாகவே கருமாரியம்மன் கோயில்கள் காணப்படுகின்றன. மாரிஅம்மனுடைய தோற்றப்பாட்டினின்றும் கருமாரியம்மன் அம்சம் வேறுபட்ட நிலையிலே காணப்படுகின்றது. கருமாரியம்மனை எதற்காக இவ்வாறு அழைக்கின்றார்கள் என்பதற்குரிய கதை புராண வரலாற்றிலே கூறப்பட்டுள்ளது.

முன்னொருகாலத்தில் சிவபெருமான் உருத்ரபூமியாகிய இடுகாட்டில் இருந்து கைலைக்குத் திரும்பினார். அப்பொழுது தனது அருகில் இருந்த பாலாம்பிகையிடம் தனது திருமேனியில் இருந்த விபூதியை எடுத்துக்கொடுத்தார். இந்தவிபூதியைக் கொண்டு உலகில் ஐந்தொழில்களைப் புரிந்து வருக எனப் பணித்து, மீண்டும் கைலை சென்று நிஷ்டையில் அமர்ந்தார். உமையன்னை, ஈசன் இருந்த இடத்தில் வடக்குத்திசையில் அமர்ந்து, ஏழு கன்னிகளாகத் தன்னை மாற்றிக் கொண்டார். அவ்வேழு கன்னியர்கள் அந்தராட்சி, ஆகாட்சி, பிரமாட்சி, காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, மாரி எனப் பெயர் பெறுவர்.

அந்தராட்சி காடுகளிலும், ஆகாட்சி மலைகளிலும், பிரமாட்சி நதிகளிலும், விசாலாட்சி காசியிலும் சென்று தங்கினர். இவர்களுள் மாரி, இறைவன் தன்னைப் பிரிந்து சென்ற இடத்தையே இருப்பிடமாகக் கொண்டார். தன்னை இரு உருவங்களாக மாற்றிக் கொண்டு முன்னும், பின்னுமாக அமர்ந்தார். முன்னுள்ள தன் இல்லத்தில் தலைமட்டும் மேலே விளங்க, உடலைப் பூமியாகிய கருவில் மறைத்து, சிவசக்தி ஐக்கிய உருவாக விளங்கினார். பின்புறம் உள்ள இரண்டாம் உருவம் முழுத்தோற்றமாகி, கைகளில் பொற்கிண்ணம், சூலம், உடுக்கை, கத்தி இவைகளை ஏந்தி, ஐந்தலை நாகம் குடையாய் விளங்க, வீராசனத்தில் அமர்ந்துள்ளார். முன்புறம் உள்ள திருவுருவத்திற்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். இதுவே கருமாரியின் தோற்ற வரலாறாகும். கருமாரிஅம்மன் வழிபாட்டிலே அருள்வாக்கு கூறுவது முக்கியமானது. இவ்வாறான அருள்வாக்கின் அடிப்படையில் எழுந்த கோயிலாக, புத்தளத்திலுள்ள கருமாரியம்மன் கோயில் காணப்படுகின்றது.

**வளரும்..**

கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM

கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்
**சர்க்கரைப் பொங்கல் விழா - 2026**
**சமய அறிவு, பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்**

இடம்: **SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH**
**5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2**
காலம்: **March 28, 2026 (Saturday) 9.00 AM**

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள்:**

| | |
|---|---|
| மழலைகள் (JK) | : 01-01-2021 இற்குப் பின் பிறந்தோர் |
| ஆரம்பப் பிரிவு (SK) | : 2020 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 1 (Gr.1) | : 2019 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 2 (Gr.2) | : 2018 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 3 (Gr.3) | : 2017 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 4 (Gr.4) | : 2016 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 5 (Gr.5) | : 2015 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 6 (Gr.6) | : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 7 (Gr.7) | : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 8 (Gr.8) | : 2012 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர் |

❋ மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

குறிப்பு:

1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4வது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற குடும்பத்தில் முதல் போட்டியாளருக்கு $10.00, அடுத்து வருவோர்க்கு தலா $5.00 வீதம் அறவிடப்படும்.
5. **மே 2, 2026**ல் நடைபெறும் சர்க்கரைப் பொங்கல் விழாவில் போட்டிகளில் பங்கு பற்றிய மாணவர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கப்படும்.

**மார்ச்சு 10, 2026க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ..........
குடும்பப் பெயர்: ..........
பிரிவு: ..........
பிறந்த திகதி: ..........
தொலைபேசி ..........
email: ..........

பங்குகொள்ளும் போட்டிகள்:

☐ பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
Secretary,
Canada Hindu Maamantram,
39, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email: canhinduma@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு: 416.497.4741
647.620.5171, 905.785.6526
416.356.7323, 647.992.0587

**விண்ணப்ப முடிவு திகதி: மார்ச்சு 10, 2026**

# இவ்வார ராசிபலன்

## 13-02-2026 வெள்ளி தொடக்கம் 19-02-2026 வியாழன் வரையும்




**மேஷம்:** காரியத்தில் வெற்றிக் காணும் வாரம். அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் வலுக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் சேரும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நண்பர்களால் நன்மை உண்டு. பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பணியில் கண்டிப்பு தேவை. எதிரிகளின் தொல்லை குறையும். வஸ்திர தானம் செய்தால் வளம் சேர்க்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். மனஅமைதி சீர் குலையும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகளால் வெகுமானம் உண்டாகும். நட்பில் பிரிவு ஏற்படும். எண்ணங்கள் மாறுபடும். தன வரவு அதிகரிக்கும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். செல்வாக்கு பெருகும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். புண்ணியம் சேர்க்கும் காலம். முகப்பொலிவு கூடும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுபச்செய்தி வரும். வெளியூர் பயணம் நன்மை தரும். சுயத்தொழில் உயர்வு தரும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூதக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: கறுப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S




**ரிஷபம்:** மாற்றங்களை சந்திக்கும் வாரம். பிறர்க்கு உதவும் குணம் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். சிந்தனைகள் மேலோங்கும். ஆரோக்கியம் அதிகரிக்கும். மனைவி வழி அன்பு அதிகரிக்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பழைய பாக்கி வசூலாகும். பங்குத்தொழில் லாபம் தரும். தொலைபேசி தகவல் தொல்லை தரும். எண்ணிய காரியம் கைகூடும். மன சந்தோஷம் அதிகரிக்கும். கடன்தொல்லை நீங்கும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். குதூகலமான மனநிலை காணப்படும். வீண் செலவுகள் குறையும். விவேகம் வெளிப்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். உடன்பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிடைக்கும். உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். மனோபயம் ஏற்படும். நிர்வாகச் செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பதவி உயர்வு கிடைக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். போட்டிகள் அதிகரிக்கும். வியாபாரம் சுமாராக இருக்கும். முத்தான வாய்ப்புகள் பெருகும். கலைத்துறையில் கௌரவம் கூடும். கனவு பலிதமாகும். அலைப்பேசி செய்தி ஆனந்தம் தரும். புதிய தொழில் முயற்சி பலன் தரும். விளையாட்டுத் துறையில் வெகுமானம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீஅய்யனாரப்ப சுவாமி, அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z




**மிதுனம்:** மனநிறைவு கிடைக்கும் வாரம். பூர்வீகச் சொத்து வந்து சேரும். உடல்சோர்வு உண்டாகும். அலுவலக பணியில் கவனம் தேவை. எதிர்ப்புக்கள் கூடும். எண்ணங்கள் ஈடேறும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மை உண்டு. குடும்ப தேவைகள் அதிகரிக்கும். புதுமைகள் நிறைந்த காலம். இயந்திர பணியில் ஆர்வம் கூடும். புதிய நட்பில் எச்சரிக்கைத் தேவை. சொல்லில் கவனம் தேவை. கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மனக்கலக்கம் உருவாகும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலன் கூடும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். உறவுகளால் நன்மை உண்டாகும். இடமாற்றம் ஏற்படும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பணியாளர்களின் பாராட்டுக் கிட்டும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். காதல் கசக்கும். அந்நியர் ஆதரவு கிடைக்கும். உறவினர்கள் பகை ஏற்படும். பொறாமைகள் விலகும். விவசாயிகள் பயன்பெறுவார்கள். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். வேற்று இன நட்பு கிட்டும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகம் உன்னதம் தரும். தாய் வழி உறவு மூலம் லாபம் அதிகரிக்கும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். அலுவலக பணி அனுகூலம் தரும். காரியத்தடை அகலும். பெருமைகள் கிடைக்கும். வறுமைகள் அகலும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். எதிலும் எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: குண்டத்து காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,9,1,3
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,L




**கடகம்:** விவேகத்தோடு செயல்படும் வாரம். சகோதரியால் லாபம் உண்டு. எதிர்ப்புக்கள் உருவாகும். பல்வலி வந்து போகும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. நன்மைகள் அதிகரிக்கும். வீடு, மனை யோகம் உண்டு. விவசாயம் லாபம் தரும். சுபச்செய்தி கூடி வரும். கைப்பொருள் களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். புதிய பொருள் சேரும். பழைய கடன் வசூலாகும். பணவரவு அதிகரிக்கும். சாதனை படைக்கும் காலம். பிள்ளைகளால் பெருமை சேரும். அரசியல் லாபம் தரும். வேலை பளு அதிகரிக்கும். வில்லங்கம் ஏற்படும். விரக்திகள் மறையும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். கூட்டுத்தொழிலில் லாபம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. கலைத்தொழிலில் திருப்பம் உண்டு. மாங்கல்ய நமஸ்காரம் மனோ தைரியம் தரும். வறுமைகள் அகலும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை உண்டு. மேலதிபரின் பாராட்டுக் கிட்டும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும்.



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உணர்வு உண்டு. சுமுகமான சூழ்நிலை பெருகும். நீண்ட நாளைய நோய் விலகும். இல்லத்தில் அமைதி கூடும். தேக பலம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பேச்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,A




**சிம்மம்:** பெருமைகள் சேரும் வாரம். வார்த்தைகளில் நிதானம் தேவை. உடல்நலம் சிறக்கும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பங்கள் தீரும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். பொருளாதார நிலை உயரும். உடல்நலனில் அக்கறை தேவை. காதல் கைக்கூடும். மனதில் இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புது முயற்சிள் பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். வாயில் தேடி வரன் வரும். உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. மனைவியின் அன்பு அதிகரிக்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். கடன் வாங்க நேரிடும். மன நிம்மதி அதிகரிக்கும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். திறமைகள் வெளிப்படும். குடும்ப வளர்ச்சி கூடும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. தர்மச் சிந்தனை மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். பணவரவு அதிகரிக்கும். செல்வாக்கு மேம்படும். பாதகம் விலகும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பொது வாழ்வில் புகழ் கூடும். வேண்டாத நபர்கள் விலகிடுவர். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திருப்புமுனை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திரௌபதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,J




**கன்னி:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு விலகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். பழையக்கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். திடீர் பயணம் உற்சாகம் தரும். தொழில் அபிவிருத்தி அடையும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். கணவன், மனைவி உறவு மேம்படும். மனக்கசப்பு நீங்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். துணிச்சல் மேலோங்கும். வேண்டும் வரம் கிட்டும். நட்பு வட்டம் விரிவடையும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். செய்தொழிலில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்த்த தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். உற்சாகம் களைகட்டும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிடைக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெரியோர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். வறுமைகள் ஒழியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ வேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,6,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,S




**துலாம்:** ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும் வாரம். உற்சாகம் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் வருகை ஏற்படும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும். வழக்குகள் முடிவுக்கு வரும். எதிரிகள் பலம் குறையும். பொருளாதார வளம் மேம்படும். காதலர்களிடையே கசப்புகள் விலகும். சொத்துப் பிரச்சினைகள் விலகும். கடன் சுமையிலிருந்து விடுதலை பெறுவீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். பொறுப்புக்கள் கூடும். ஆண்களின் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். மாற்று இன உதவி கிட்டும். திருப்புமுனை ஏற்படும். வெற்றிகள் குவியும். மதிப்பு உயரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. விருந்தினர் வருகை ஏற்படும். புதிய நட்பு உருவாகும். எண்ணம் வண்ணமயமாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் வளர்ச்சி கூடும். இன்றையப் பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். பொறாமைகள் அதிகரிக்கும். வில்லங்கம் விலகும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். தாய்வழி உறவில் தகராறுகள் குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கணினித்துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீசெல்வ நாயகி, அதிர்ஷ்ட எண்: 8,5,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,F (தொடர்ச்சி 21 பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** எண்ணங்கள் அதிகரிக்கும். பிள்ளைகள் வழிய-ில் மகிழ்ச்சி கூடும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். சுபவிரயம் ஏற்படும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கடன்தொல்லைகள் தீரும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். மாற்றங்களை சந்திப்பீர்கள். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைத்தூர தொடர்பு லாபம் தரும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். புத்தி சாதுர்யம் அதிகரிக்கும். விரும்பிய பொருள் கிடைக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். கொண்டாட்டங்கள் கூடும். திருப்திகள் அதிகரிக்கும். வறுமையின் வாட்டம் குறையும். பெருமைமிக்க காலமாக அமையும். மாலை நேரத்தில் மகிழ்வான செய்தி வரும். வளமான சிந்தனை உருவாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். பெண்களுக்கு பெருமை சேரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. நவகிரஹ அனுகிரஹம் கூடும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். ஆறுதலான சூழ்நிலைகள் அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். பணியில் உயர்வு கிட்டும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைகளால் பெற்றோருக்கு பெருமை சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 2,8,9,5
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,G




**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அதிகரிக்கும் வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப்போகும். பணியில் கவனம் தேவை. வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர் குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். பெருமைகள் கூடும். பேச்சில் பணிவு தேவை. கடன் சுமை குறையும். காரியத்தடை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பக்கத்து வீட்டு பகை மாறும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். மாணவர் திறமைகள் பளிச்சிடும். முக்கிய முடிவுகளில் தெளிவு இருக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அதிகரிக்கும். சிக்கனத்தை கையாள வேண்டும். இசை ஆர்வம் கூடும். உணவுத்தொழில் உயர்வு பெறும். வீண் செலவுகள் ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தோதான எண்ணம் உருவாகும். சுறுசுறுப்பு பெருகும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். மருத்துவச் செலவு குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். பணமும், பாராட்டும் சேரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். இரும்பு தொழில் ஏற்றம் தரும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். ஆரோக்கியம் சீராகும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வியாபாரத்தில் வேகம் கூடும். கனவுகள் பலிதமாகும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். பாகப்பிரிவினை ஏற்படும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,N





**மகரம்:** கோரிக்கைகள் நிறைவேறும் வாரம். தர்மச்சிந்தனைகள் மேலோங்கும். வாகன மாற்றம் உண்டு. சகோதர வழியில் சந்தோஷம் கூடும். மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். புதிய தொழில் முயற்சியைத் தள்ளிப் போடவும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். தகுதிகள் மிகுதியாகும். உடல்நலம் மேம்படும். சுபச்செய்திகள் வரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். மனக்குழப்பம் வந்து நீங்கும். திருமண முயற்சி பலன் தரும். அரசியல் ஆதாயம் தரும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். நல்லோர்கள் பாராட்டு கிடைக்கும். பொறுப்புக்கள் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். தொட்டக் காரியம் ஜெயமாகும். குடும்ப வளர்ச்சி கூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். மதிப்பும், மரியாதையும் கிடைக்கும். தொழில் முயற்சி வெற்றி தரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். தனலாபம் கூடும். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,G




**கும்பம்:** நிதி நிலைமை திருப்தி தரும் வாரம். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் கூடும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகையுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். மெத்தனப் போக்கு விலகும். பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். அனுகூலமான காலம். பூமியால் லாபம் உண்டு. பதவி உயர்வு வரும். மங்களகரமான செய்தி வரும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. மருத்துவச் செலவு உண்டு. மாணவர்களுக்கு பாராட்டுக்கள் கிடைக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். ஞாபக மறதி ஏற்படும். பிள்ளைகள் வழி செலவு அதிகரிக்கும். மனோ தைரியம் அதிகரிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீரும். வழக்குகள் சாதகமாகும். காதலை கூடும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். உடல் உபாதை நீங்கும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். பணி செய்யும் இடத்தில் பாராட்டுக் கிட்டும். சாதகமான வாய்ப்பு அமையும். ஊதிய உயர்வு கிட்டும். மாலை நேரத்தில் இனிய தகவல் வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,5,9,3
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,S




**மீனம்:** வாயில் தேடி வாய்ப்பு வரும் வாரம். காரியங்கள் கை கூடி வரும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றி தரும். விருந்தினர் வருகை உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். விவேகமான பேச்சுக்களால் வில்லங்கம் விலகும். வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. தாய்ப்பாசம் அதிகரிக்கும். பணவரவு பெருகும். வம்பு தும்புகள் ஒழியும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். கோரிக்கைகள் நிறைவேறும். எண்ணங்கள் வண்ணமயமாகும். மாற்று யோசனை பயன் தரும். வாகன மாற்றம் உண்டு. மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். வரவுகள் திருப்தி தரும். ஆபத்துகள் விலகும். நினைத்த விஷயம் நிறைவேறும். அன்னிய தேச பயணம் உண்டு. காரியங்கள் வெற்றி முகமாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். சொந்த பந்தங்களின் உதவி கிடைக்கும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. பாகப்பிரிவினை சுமூகமாகும். விலகி சென்றவர் விரும்பி வருவர். புதிய சொத்துக்கள் சேரும். எதிர்கால சிந்தனை ஏற்றம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,H

## City of Dollard-des-Ormeaux, in Montreal, Québec, honors three Tamil Canadian Community Activists for their remarkable services.

## மொன்றியால் வாழ் மூன்று தமிழ்க் கனடியர்களான சமூகச் செயற்பாட்டாளர்களை அவர்களது சமூக சேவைக்காக கௌரவித்த Dollard-des-Ormeaux நகரசபை



கனடாவின் மொன்றியால் மாநகரில் தமிழ் மக்கள் அதிகளவு வாழும் Dollard-des-Ormeaux நகரசபைபிரதேசத்தில் தான் மொன்றியால் அருள்மிகு திருமுருகன் தேவஸ்த்தானமும் உள்ளது. மேற்படி நகரத்தில் நீண்ட காலம் வாழ்ந்து வரும் மூன்று தமிழ்க் கனடியர்களான சமூகச் செயற்பாட்டாளர்களை அவர்களது சமூக சேவைக்காக கௌரவித்த Dollard-des-Ormeaux நகரசபை அண்மையில் நகர சபை சபா மண்டபத்தில் நடத்திய அரசவைபவம் ஒன்றில் கௌரவித்து சிறப்புச் செய்தது.

மேற்படி சிறப்புக் கௌரவத்தையும் பாராட்டுக்களைப் தமதாக்கிக் கொண்டவர்கள் மொன்றியால் மாநகரில் நன்கு அறியப்பெற்ற மக்கள் சேவையாளர்களான சிவஸ்ரீ வெங்கடேஸ்வரக்குருக்கள் (ஸ்ரீ ஐயா), திரு. வாகீசன் நடராஜா மற்றும் உதயகுமார் குழந்தைவேல் ஆகியோர் ஆவார். இவர்கள் மூவரும் பல அமைப்புக்களில் அங்கத்துவம் வகித்து சேவைகளை ஆற்றிவரும் வேளையில் மொன்றியால் அருள்மிகு திருமுருகன் தேவஸ்த்தானத்தின் பரிபாலனசபையிலும் இணைந்து நீண்டகால பணியாற்றி வருகின்றனர்.

அத்துடன். அங்கு தமிழ் மற்றும் சமய வகுப்புக்கள் தொடர்ந்து இடம்பெறவும் உழைத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Dollard-des-Ormeaux நகர சபை சபா மண்டபத்தில் நடத்திய அரசவைபவத்தில் மேற்படி மூவரையும் கௌரவித்து சிறப்புச் செய்தபோது அதன் மேயர் Alex Bottausci தனது உரையில் இந்த நகரசபைக்குள் வாழும் தமிழ் மக்கள் சிறந்த அர்ப்பணிப்பு உள்ளவர்களாக எம்மால் இனங்காணப் பெற்றுள்ளார்கள். அத்துடன் குறிப்பாக, கடந்த கொரோனா நோய்த் தொற்று காலப்பகுதியில் தங்கள் சமூக மக்களுக்கு உதவிகள் வழங்குவதில் மாத்திரமல்ல பிற சமூகத்தவர்கள் மற்றும் வைத்தியசாலைகளுக்கும் உதவிகள் வழங்குவதில் இன்று கௌரவிக்கப்பெற்ற மூவரும் முன்னின்று உழைத்தார்கள் என்று பாராட்டினார்.

***- UTHAYAN LJI Journalist Ganesh -***





# மரண அறிவித்தல்

தோற்றம்: 09-04-1946
மறைவு: 08.02.2026



## திரு. செல்வத்துரை சட்டநாதர்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர். இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம். அத்துடன் ஆசிரியர்)

**பருத்தித்துறை மாதனையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் திருநெல்வெலியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த செல்வத்துரை சட்டநாதர் அவர்கள் 08.02.2026 அன்று ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியில் காலமானார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வத்துரை - தங்கம்மா தம்பதியினரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - இராசம்மா தம்பதியினரின் சுவீகர புத்திரனும்,

சிற்சபேசன் (கனடா), கனகசபேசன் (கனடா), தர்மசபேசன் (கனடா) ஆகியோரின் உணர்நிலை சகோதரனும்,

காலஞ்சென்றவர்களான கந்தசாமி (பிரபல சிற்பக் கலைஞர் - இடதுசாரிச் சிந்தனையாளர்) - இராசலட்சுமி தம்பதியினரின் மருமகனும்,

விமலசோதி அவர்களின் அன்புக் கணவரும்,

கோபிதன் (Id Signarts), கௌதமி (DFCC Bank சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

சங்கீதா (Commercial Bank Regional Office - யாழ்ப்பாணம்) அருண் (NT BANK நெல்லியடி) ஆகியோரின் அன்பு மாமனாரும்,

அகரன், சிவயன், அகன்யன், அகர்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும்,

விமலதாஸ் (அமரர்) மற்றும் விமலராணி (ஓய்வபெற்ற தையல் போதனாசிரியர்). விமலரட்ணம் (இங்கிலாந்து), விமலரஞ்சினி (இங்கிலாந்து) ஆகியோரின் மைத்துனரும்,

ஸ்ரீனிவாசன் (இங்கிலாந்து) கிரிசாந்தி (இங்கிலாந்து) ஆகியோரின் சகலனும் ஆவார்..

***அன்னாரின் பூதவுடல் பார்வைக்கு வைக்கப்பெற்று பின்னர் 10-02-2026 அன்று திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பெற்றது.***

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**அனுதாபம் தெரிவிக்க விரும்புவோர் வற்ஸ் அப் அழைப்பின் மூலம் +94772241772 என்னும் இலக்கத்தில் அன்னாரின் குடும்பத்தினரை அழைக்கலாம்.**

# இலங்கையின் முன்னைய பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக தனது புதிய வரைவைத் திருத்துவதற்கு அநுர அரசாங்கம் தயார் என்பதை நிரூபிக்க வேண்டும்



## அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேண்டுகோள்!

இலங்கையின் சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு (PTA) மாற்றீடாகக் தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டு நீதியமைச்சரால் வெளியிடப்பட்ட சட்ட மூலமானது, முதற்பார்வையில் ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தினால் (2018, 2023) முன்மொழியப்பட்ட சிக்கல் பொருந்திய பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமூலங்களின் பரந்த எண்ணக்கருவியல் சாயைகளையே பிரதிபலிக்கிறது: இருப்பினும் இதில் சில குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன.

இது தொடர்பில் நீதியமைச்சுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கும் அதேவேளை, பொதுமக்களின் ஆலோசனைகளுக்கான அழைப்பு வெறும் கண்துடைப்பாகவும் இருக்கக்கூடாது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வர்த்தமானியில் வெளியிடப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இந்த வரைவைத் திருத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதை வெளிப்படுத்துவதன் மூலம் தனது நல்ல நோக்கத்தை நிரூபிக்க வேண்டும். அந்த நோக்கம் செயற்படுத்தப்படுகிறதா என்பதை நாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

### பொதுமக்களின் மீளாய்வுக்காக வெளியிடப்படுவது வரவேற்கத்தக்கது

இச்சட்டமூலம் நடைமுறைப்படுத்தப்பட்டால், அதில் உள்ள வேறுபாடுகள் அச்சட்டத்தின் ஒட்டுமொத்தமான பாதகமான தாக்கத்தைக் குறைப்பதற்குப் போதுமானதாக இருக்குமா என்பதுதான் கரிசனைக்குரிய கேள்வியாகும். அந்தக் கேள்விக்கான பதிலைப் பெறுவதற்கு இந்த வரைபு குறித்த விரிவான விமர்சனம் வரும் வரை காத்திருக்க வேண்டும். இத்தருணத்தில், பயங்கரவாதக் குற்றத்தின் வரைவிலக்கணம் தொடர்பான கரிசனைகளைக் கோடிட்டுக் காட்டுவதே எமது நோக்கமாகும். நியாயமான ஐயங்களை ஏற்படுத்தும் வரைவின் ஏனைய பிரிவுகள் பின்னர் ஆராயப்படும்.

நிச்சயமாக 2025 ஆம் ஆண்டு வரைவானது விமர்சனங்கள் மற்றும் கருத்துகளுக்காக ஒரு நியாயமான கால அவகாசத்துடன் பகிரங்கமாக வெளியிடப்பட்டது பாராட்டுக்குரியது. இது தேசிய பாதுகாப்புச் சட்ட வரைவுகள் ஒரு சிலருக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டு பின்னர் அவற்றின் ஆட்சேபனைக்குரிய விடயங்கள் "கசிந்தபோது" மக்கள் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்திய முந்தைய அனுபவங்களுடன் ஒப்பிடுகையில் முற்றிலும் மாறுபட்டதாகும்.

உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை, 2025 வரைவின் நீண்ட தலைப்பு ரணில் விக்ரமசிங்கவின் தூண்டுதலால் உருவான 2023ஆம் ஆண்டின் "பயங்கரவாத எதிர்ப்பு வரைபுக்கு" (ATB) முற்றிலும் சமமானது. இந்த 2025 வரைவினது குறுகிய தலைப்பு அவ்வளவு நற்சகுனமாக அமையாததோடு, "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம்" (PSTA) என அலங்கோலமாகப் பெயரிடப்பட்டுள்ளது.

### முன்னுரையில் ஒரு நேர்ப்பாங்கான மாற்றம்

எவ்வாறெனினும், பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தின் முன்னுரையானது "பொதுமக்கள் பாதுகாப்பைப் உறுதிசெய்தல்" எனும் நலனை, சட்டவாட்சி மற்றும் "அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கான முழுமையான மரியாதை" ஆகிய கொள்கைகளுடன் சமநிலைப்படுத்த முயல்கிறது என்பதை நேர்மையாகக் கூற வேண்டும். தேசியப் பாதுகாப்பு விவகாரங்களை மனித உரிமைகளுடன் சமநிலைப்படுத்த வேண்டும் எனவும், "சர்வதேசத் தரநிலைகள் மற்றும் சரவதேச மட்டத்திலான சிறந்த நடைமுறைகளை உள்ளடக்கியிருக்க வேண்டும்" எனவும் 2023 பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை மீளாய்வு செய்தபோது உயர்நீதிமன்றம் வழங்கிய வழிகாட்டலை இது பிரதிபலிக்கிறது (விசேட உயர் நீதிமன்றத் தீர்ப்பு, 2024).

அதற்கமைய, 2023ஆம் ஆண்டின் பயங்கரவாத எதிர்ப்பு வரைவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்ட வரைவு (CTA) போன்று அல்லாது, முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலமானது அதன் பிரிவுகளை நடைமுறைப்படுத்தும்போது, "சர்வதேச மனித உரிமைகள் சாசனங்களின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட சுதந்திரத்துக்கான உரிமை, தனிநபர் பாதுகாப்பு, நியாயமான விசாரணை மற்றும் தன்னிச்சையான தடுத்து வைத்தலுக்கு எதிரான உரிமை" ஆகியவற்றை ஏற்றுக்கொள்கிறது.

பின்னர் வரக்கூடிய சட்ட ஏற்பாடுகளின் பொருள்கோடல்களில் இந்த முன்னுரையானது வகிக்கும் முக்கிய பங்கைக் கருத்திற் கொள்ளும்போது இந்த வேறுபாடு முக்கியமானதாகக் காணப்படுகிறது.

உள்ளடக்கம் சார்ந்து நோக்கும்போது, பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தின் 3 (1) உபபிரிவானது, நான்கு இலக்குகளை அடைவதற்கான "நோக்கத்துக்காக", "ஆளொருவரால்" வேண்டுமென்றே அல்லது தெரிந்தே செய்யப்படும் "விளைவை ஏற்படுத்தவல்ல எந்தவொரு செயலையும்" பயங்கரவாதக் குற்றம் என வரைவிலக்கணப் படுத்துகிறது (விளைவு என்ற சொல் பின்னர் பிரிவு 3 (2) இல் விளக்கப்பட்டுள்ளது). இந்த நான்கு இலக்குகளில் மூன்று ஏற்கனவே பரீட்சயமானவை: ஆனால் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலமானது "பயங்கரவாத நிலைமையைத் தூண்டுதல்" என்ற நான்காவது அம்சத்தைப் புதிதாகச் சேர்த்துள்ளது.

### பயங்கரவாத நடவடிக்கைகளை வரையறை செய்தல்

குற்றத்தின் "மனநிலை" என்ற கூறினை வரையறுக்கும்போது "என்ற எண்ணத்துடன்" என்பதற்குப் பதிலாக "என்ற நோக்கத்துக்காக" என்பதைச் சேர்த்திருப்பது மிகவும் குழப்பகரமானது. "நோக்கம்" என்ற சொல் ஒரு குறிப்பிட்ட செயலின் பின்னாலுள்ள ஊக்கத்தைக் குறிக்கிறது எனச் சிலர் வாதிடலாம். ஆனால் இத்தகைய சந்தர்ப்பங்களில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட "எண்ணம்" என்ற சொல்லை ஏன் தவிர்த்துள்ளனர் என்ற கேள்வி எழுகிறது. "நோக்கம்" என்ற சொல்லின் விரிவான மற்றும் பொதுவான பயன்பாடு, குற்றத்தை நிரூபிப்பதற்கான தரத்தை கணிசமாகக் குறைத்துவிடக்கூடுமோ என்கிற நியாயமான ஐயத்தை ஏற்படுத்துகிறது.

இங்குள்ள முக்கிய பிரச்சினை என்னவென்றால், 3 (2) உபபிரிவில் தடைசெய்யப்பட்ட "விளைவை" ஏற்படுத்தும் எந்தவொரு செயலைச் செய்யும்போதும் ஒரு நபர் "பயங்கரவாத" எண்ணத்தைக் கொண்டிருந்தாரா என்பதைத் தீர்மானிப்பதாகும். இது வெறுமனே சட்டக் கலைச்சொற்கள் குறித்த விவாதம் அல்ல, மாறாக குற்றத்துக்கான வரைவிலக்கணத்தின் அடிப்படையுடன் தொடர்புடையது. இலங்கையின் சகல பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களிலும் வரைவுகளிலும் உள்ள முதன்மையான ஒரு பிரச்சினை என்னவென்றால், சாதாரண குற்றவியல் குற்றங்களுக்கும் "பயங்கரவாத" குற்றங்கள் என வகைப்படுத்தப்படும் குற்றங்களுக்கும் இடையே ஒரு தெளிவான பிரித்தற்கோடு இல்லாமை ஆகும்.

இந்தக் குறைபாடானது குறிப்பாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திலும் தொடர்ச்சியான அவசரகால விதிமுறைகளிலும் பிரதிபலிக்கிறது. இது புலனாய்வு நடவடிக்கைகளின் நோக்கத்தையே குழப்பமடையச் செய்கிறது. இதன் விளைவாக, நூற்றுக்கணக்கான பொதுமக்கள் சிறையில் அடைக்கப்பட்டு, தன்னிச்சையான கைது மற்றும் தடுத்து வைத்தல்களுக்கு எதிரான சாதாரண சட்டப் பாதுகாப்புகள் அவர்களுக்குப் பொருந்தாமல் போயுள்ளன. இந்த நூற்றுக்கணக்கானவர்களில் எத்தனை பேருக்குத் தமது அரசியலமைப்பு உரிமை மீறல்கள் குறித்து வாதாடுவதற்கு சட்டத்தரணிகளை அமர்த்தும் வசதியும் செல்வாக்கும் இருந்திருக்கும்?

### கோட்பாட்டிலும் பிரயோகத்திலும் சட்டத்தின் நிலை

அத்தகைய வழக்குகள் வாதிடப்பட்டு அரசியலமைப்பு உறுதிப்படுத்தும் பாதுகாப்பின் மிகச்சிறந்த கொள்கைகள் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பின்னரும் அவை எந்த அளவுக்கு மதிக்கப்பட்டுள்ளன? 1970களின் பயங்கரவாதத் தடைச் சட்டம் முதல், தெற்கு முதல் வடக்கு வரை மோதல்கள் உக்கிரமடைந்த காலத்திலும் கூட இலங்கையின் உயர்நீதிமன்றத்தினால் தனிமனித உரிமைகளைப் பாதுகாக்கும் தர்க்கரீதியான நீதித்துறைத் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் இது அரசின் நடைமுறை மற்றும் கொள்கையில் எவ்வகையான நடைமுறைரீதியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தில், "பயங்கரவாத நிலைமையைத் தூண்டும்" நோக்கத்துடன் செயலில் ஈடுபடுவதைத் தடுத்தல் என்பதைத் தவிர, அந்த வரைவிலக்கணத்தின் மற்றொரு அம்சம் "பொதுமக்களை அல்லது பொதுமக்களின் ஒரு பகுதியை அச்சுறுத்துதல்" என்ற பரிச்சயமான மொழியினை உள்ளடக்கியுள்ளது. மீதமுள்ள அம்சங்களும் பரிச்சயமானவையே. அவை "இலங்கை அரசாங்கம், அல்லது வேறேதேனும் ஓர் அரசாங்கம் அல்லது ஒரு சர்வதேச அமைப்பை ஏதேனும் ஒரு செயலைச் செய்யும்படி அல்லது செய்யாமல் தவிர்க்கும்படி கட்டாயப்படுத்துதல்" எனும் விடயத்துடன் தொடர்புடையவை.

அதேபோன்று "யுத்தத்தைப் பரப்புதல் அல்லது பிராந்திய ஒருமைப்பாட்டை மீறுதல் அல்லது தேசிய இறையாண்மையை மீறுதல் போன்றவை" தடை செய்யப்பட்டுள்ளன. இவற்றை எவரும் குறை கூற முடியாது. ஆனால் பிரிவு 3 (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள "விளைவுகள்" குறித்து நோக்கும்போதுதான் சிக்கல் எழுகிறது. இதனை பிரிவு 3 (1)இல் உள்ள "நோக்கத்துடன்" இணைத்து வாசிக்க வேண்டும். இந்த "விளைவுகளின்" நீண்ட பட்டியல் அப்படியே 2023 பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தைப் பிரதிபலிக்கிறது. "பொதுப் பயன்பாட்டு இடத்திற்கு, பொதுச் சொத்துகளுக்கு, பொது அல்லது தனியார் போக்குவரத்து அமைப்புக்கு அல்லது ஏதேனும் உட்கட்டமைப்பு வசதி அல்லது சுற்றுச் சூழலுக்குப் பாரிய சேதத்தை விளைவித்தல்" (பிரிவு 3 (2)(ந)) இதற்கு ஓர் உதாரணமாகும்.

### ஒரு "பிரதி செய்து ஒட்டும்" செயற்பாடு

மற்றொரு உதாரணம், "பொதுமக்களின் அல்லது அதன் ஒரு பிரிவினரின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு பாரிய சேதத்தை விளைவிப்பதை" ஒரு பயங்கரவாதச் செயலாக வரையறுக்கும் பிரிவு 3 (2) (ப) ஆகும். இப்பிரிவின் ஆபத்துகள் குறித்து எழுதிய நான், "நியாயமான தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கூட அரசாங்கத்தை ஒரு செயலைச் செய்யும்படி அல்லது செய்யாமல் தவிர்க்கும்படி கட்டாயப்படுத்தும் நோக்கில் பொதுச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு "பாரிய சேதத்தை" விளைவிக்கும் செயல்கள் என அச்சுறுத்தலாகக் கருத முடியும்" எனக் குறிப்பிட்டிருந்தேன்.

மேலும், சாதாரண குற்றவியல் தடைகளின் கீழ் வரக்கூடிய நடத்தைக்கும் "பயங்கரவாத" செயல்களுக்கும் இடையில் அதீதமான ஒற்றுமையை பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் புலப்படுத்துகிறது எனவும், ஊடகங்களை இலக்கு வைப்பதானது பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் வேறு நோக்கங்களுக்காகவே முன்வைக்கப்படுகிறது என்பதைக் காட்டுகிறது எனவும் ஏற்கனவே கூறப்பட்டது. இந்தக் கரிசனைகள் இப்போதும் நீடிக்கின்றன. 2025ஆம் ஆண்டின் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலமானது 2023ஆம் ஆண்டின் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை அப்பட்டமான "பிரதி செய்து ஒட்டும்" ஒரு வேலையாகும் பிரிவு 3 (2) இன் இலக்கங்கள் கூட மாறறப்படாமல் அப்படியே வைக்கப்பட்டுள்ளன.

"ஏதேனும் போராட்டம், ஆதரவு திரட்டல் அல்லது கருத்து வேறுபாடு அல்லது வேலைநிறுத்தம், கதவடைப்பு அல்லது ஏனைய தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவது, பிரிவு 3 (2)இன் வரம்புக்குள் கொண்டு வருவதற்கான தானாகவே போதுமான அடிப்படையாக அமையாது" எனும் ஒரு விதிவிலக்கினை பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம் வழங்குவது அன்றைக்கும் இன்றைக்கும் இடையிலான வேறுபாடு ஆகும். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்ததுக்கு பதிலளிக்கும் விதமாக உயர்நீதிமன்றம் இத்தகைய "விதிவிலக்கு" ஒன்றின் அவசியத்தைச் சுட்டிக்காட்டியதற்கமையவே இது சேர்க்கப்பட்டுள்ளது.

### மலையும் எலியும்

பல மாத கால உழைப்புக்குப் பிறகு, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எனும் பெரிய மலையிலிருந்து ரணில் விக்ரமசிங்கவின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் எனும் சிறிய சுண்டெலிதான் பிரசவிக்கப்பட்டதா? இன்று அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முக்கிய உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது இந்தப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராகவே போராடினர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. உண்மையில் அந்த "துணிச்சல் மிக்க புதிய உலகம்" எங்கே?

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1558 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 13, 2026

## City of Dollard-des-Ormeaux in Montreal Québec honors three Tamil Canadian Community Activists for their remarkable services.

# மொன்றியால் வாழ் மூன்று தமிழ்க் கனடியர்களான சமூகச் செயற்பாட்டாளர்களை அவர்களது சமூக சேவைக்காக கௌரவித்த Dollard-des-Ormeaux நகரசபை



கனடாவின் மொன்றியால் மாநகரில் தமிழ் மக்கள் அதிகளவு வாழும் **Dollard-des-Ormeaux** நகரசபைபிரதேசத்தில் தான் மொன்றியால் அருள்மிகு திருமுருகன் தேவஸ்த்தானமும் உள்ளது. மேற்படி நகரத்தில் நீண்ட காலம் வாழ்ந்து வரும் மூன்று தமிழ்க் கனடியர்களான சமூகச் செயற்பாட்டாளர்களை அவர்களது சமூக சேவைக்காக கௌரவித்த **Dollard-des-Ormeaux** நகரசபை அண்மையில் நகர சபை சபா மண்டபத்தில் நடத்திய அரசவைபவம் ஒன்றில் கௌரவித்து சிறப்புச் செய்தது. (தொடர்ச்சி 21ம் பக்கம்)

# "ஸ்ரோவில் தமிழர் சங்கம்" ஏற்பாட்டில் 2026ம் ஆண்டிற்குரிய "தமிழர் மரபுரிமை" மாதக் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது







கனடா ஸ்ரோவில் நகரத்தில் வாழும் தமிழ் மக்களால் ஆரம்பிக்கப்பெற்று தொடர்ச்சியாக இயங்கிவரும் "ஸ்ரோவில் தமிழர் சங்கம்" தனது 2026ம் ஆண்டிற்குரிய "தமிழர் மரபுரிமை" மாதக் கொண்டாட்டத்தை கடந்த 30-01-2026 அன்று நடத்தியது.
மிகவும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த இந்த விழாவில் ஸ்காபுறோவில் அமையவுள்ள "தமிழர் சமூக மையம்" கட்டட நிதிக்காக ஸ்ரோவில் தொழிலதிபர் தாஸ்"தேவதாஸ் மற்றும் சட்டத்தரணி லக்சுமி வாசன் ஆகியோர் குடும்பங்கள் வழங்கிய முறையே 25,000 டாலர்கள் மற்றும் 10,000 டாலர்கள் ஆகியவற்றிக்கான மாதிரிக் காசோலைகள் தமிழ்ச் சமூக மைய நிதி சேகரிப்புக்குழுவின் சார்பில் ரமணன் சந்திரசேகரமூர்த்தி அவர்கள் பெற்றுக்கொண்டார்.
(தொடர்ச்சி 7ம் பக்கம்)



# கனடா ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியும் ஸ்ரீ வரசித்திவிநாயகர் தேவஸ்தானமும் இணைந்து வழங்கிய "தமிழர் மரபுரிமை விழா"

கனடாவில் கடந்த பல வருடங்களாக மொழியையும் சமயத்தையும் எமது சிறார்கள் மத்தியில் தக்கவைப்பதற்காவும் அவர்களுக்கு அறிவூட்டுவதற்காகவும் அரும்பணியாற்றிவரும், கனடா ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியும் ஸ்ரீ வரசித்திவிநாயகர் தேவஸ்தானமும் இணைந்து வழங்கிய "தமிழர் மரபுரிமை மாத விழா 2025" கடந்த சனிக்கிழமை பெப்ரவரி 7ம் திகதி கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.
(தொடர்ச்சி 9ம் பக்கம்)

# SENTHIL FINANCIAL SERVICES வருமான வரி மற்றும் கணக்கியல் நிறுவனம் தனது முதலாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடியது!

**SENTHIL FINANCIAL SERVICES** வருமான வரி மற்றும் கணக்கியல் சார்ந்த நிறுவனத்தின் முதலாம் ஆண்டு நிறைவையும் தனது பிறந்த நாளையும் யாழ்ப்பாணத்திலும் ஏனைய சில நகரங்களிலும் சிறந்த பொருளியல் ஆசிரியராகவும் திட்டமிடல் திணைக்களத்தின் உயர் அதிகாரியாகவும் உதவி அரசாங்க அதிபராகவும் அறியப்பெற்றிருந்தவரும். கனடாவில் அரச வருமான வரி நிறுவனத்தின் (**CRA**) உயர் அதிகாரியாகவும் திகழ்ந்தவருமான செந்தில்வடிவேல் அவர்கள் மேற்படி இரண்டு அடையாளங்களைக் குறிக்கும் வகையில் கடந்த 7ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுறோவில் கொண்டாடினார். மேற்படி நிகழ்வுகளில் கலந்து கொண்ட ஒன்றாரியோ மாகாண அரசின் பாராளுமன்றச் செயலாளரும் மார்க்கம்- யூனியன்வில் தொகுதியின் உறுப்பினருமான வாழ்த்துரை வழங்கிய பின்னர் அவருக்கு மாகாண அரசு சார்ந்த வாழ்த்துப் பத்திரங்களை வழங்கிவைப்பதைக் காணலாம்.



தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker